மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 4 | 15 - 8 - 55 | இதழ் 8

மிராபோ

பிரெஞ்சுப் புரட்சியைத் தூண்டிவிட்ட முதல் தலைவன்

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5



இளமைக் குறும்பு கொடுத்த தொல்லை

1935-ஆம் ஆண்டு சென்னை நகரசபை உறுப்பினர் பதவிக்குப், பெத்தநாய்க்கன் பேட்டைத் தொகுதியில், காங்கிரசை எதிர்த்து அறிஞர் அண்ணு அவர்கள் போட்டியிட்டபொழுது, இருசாராரின் தேர்தல் கூட்டங்கள் ஏராளமான அளவில் நடைபெற்றன. பெத்தநாய்க்கன் பேட்டையின் எல்லாப் பகுதிகளிலும் இருசாராரின் கூட்டங்களும் நடைபெற்றன.

காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்ட தோழர் பாலசுப்பிரமணிய முதலியாருக்கு ஆதரவாக சத்தியமூர்த்தி, சீனிவாசராவ், வி. சி. கோபாலரத்தினம் போன்ற தோழர்கள் மிக மும்முரமாக வேலைசெய்துவந்தனர்.

அறிஞர் அண்ணு அவர்கள் தாழ்த்தப்பட்ட தோழர்கள் அதிகமாக வாழும் பகுதியில், தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசும்போது, “தாழ்த்தப்பட்ட தோழர்களை நான் சமமாக மதிப்பவன். எனவேதான் நீங்கள் சமைத்துப் போட்ட உணவை நான் உங்களோடு சமமாக உட்கார்ந்து சாப்பிட்டேன், இப்பொழுதும் உட்கார்ந்து சாப்பிடபோகிறேன். என்னைப் போல காங்கிரசுத் தலைவர்களும் உங்களைச் சமமாகவா மதிக்கிறுர்கள்? இல்லையே! வேண்டுமானுல் நீங்கள் சமைத்த உணவைச் சாப்பிட, அவர்களை அழைத்துப்பாருங்கள்! அவர்கள் உங்கள் உணவை ஒருநாளும் உண்ணமாட்டார்கள்! அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அவர்கள் உங்களை எந்த அளவுக்கு மதிக்கிறுர்கள் என்பதை!” என்னும் கருத்துப்பட பேசிவிட்டுத் தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர் வீட்டில் உணவருந்திவிட்டுச் சென்றுவிட்டார்.

பிறகு காங்கிரசுச் சார்பாக அதே பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேச தோழர் சீனுவாசராவ் அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, ஒரு தாழ்த்தப்பட்ட தோழர் மீன்குழம்பு ஊற்றிப் பிசையப்பட்ட சோற்றை ஒரு சட்டியில் எடுத்துக்கொண்டுவந்து, தோழர் சீனுவாசராவ் அவர்களிடம் நீட்டிச், சாப்பிடும்படியும், சாப்பிட்டால்தான் தங்களை அவர் சமமாக மதிப்பதாக ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறினுர். மீன குழம்பின் வாடையையே அதுவரையில் நுகராத சீனுவாசராவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவரைச் சாப்பிட்டுக் காண்பிக்கும்படி கூட்டத்தினர் வற்புறுத்தத் தொடங்கினர். கூட்டம் குழப்பநிலை அடைந்தது. சைவ உணவு சமைத்துப் போட்டால் வேறோர் நாள் வந்து சாப்பிடுவதாக வாக்களித்துச் சென்றுராம். தாங்கள் சமத்துவ நோக்கம் கொண்டவர்கள்தாம் என்பதைத் தாழ்த்தப்பட்ட தோழர்களுக்குக் காண்பிக்க வேண்டி, வேண்டா வெறுப்போடு, வேறுவழியில்லாமல், தோழர் சீனுவாசராவும், பிற காங்கிரசுக்காரர்களும் வேறோர்நாள் போய்ச், சைவ உணவைத் தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டுக் காட்டினுர்களாம்.

அறிஞர் அண்ணு அவர்களின் ‘இளமைக்குறும்பு’ காங்கிரசுக்காரர்களை இப்படிப்பட்ட புறக்கணிக்கமுடியாத தொல்லைகளுக்கு ஆளாக்கிற்று!

443

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15-8-55 திங்கட்கிழமை

திகைப்பை நீக்காத் திட்டம்

இந்தியத் துணைக்கண்டம் ஒரே ஆட்சிப் பரப்பாகக் கருதப்பட்டு, இந்திய யூனியன் ஆட்சியின் கீழே திராவிடம் ஆடக்கப்பட்டிருக்கும் காலம் வரையில், திராவிடம் வாழவும் வளரவும் வழிவகைகள் கிடைக்கா என்பதை நாம் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் திராவிட மக்களுக்கு வற்புறுத்தி உணர்த்திவருகிறோம்.

இந்திய யூனியன் ஆட்சி, வடநாட்டின் வளர்ச்சியிலே மட்டும் அக்கறைகொண்டுள்ள வடநாட்டவரின் ஆதிக்கத்தால் ஆட்டிப் படைக்கப்படுகிறது என்பதை, எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இந்தியாவோடு நேரடித் தொடர்பு ஏதும் அற்றவராய், இந்தியப் பிரச்சினைகளை நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்க்கும் வாய்ப்புப் பெற்றவராய் இருப்பவரும், இலங்கைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராய் இருந்தவரும், அரசியல் சட்ட திட்டங்களிலே மேம்பட்ட அறிவு பெற்றவரும் ஆன சர் ஐவர் ஜென்னிங்சு 1952-ஆம் ஆண்டில், மார்ச்சுத் திங்களில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் பேசும்போது, " இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், வட இந்தியாவிலுள்ள இந்துக்கள் கையில், கட்டுப்பாட்டாதிக்கத்தை ஒப்படைக்கிறது " (The Indian Constitution vests control in the hands of the Hindus of the North) என்று தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டார். இந்த நடுநிலையாளரின் கூற்று நேர்மையாளர்க்கு உண்மையைப் புலப்படுத்தும் என்று கருதுகிறோம்.

'இந்திய யூனியன் ஆட்சியின்கீழ் வடக்கு பொலிவுற்று வளர்கிறது, தெற்கு புறக்கணிக்கப்பட்டுத் தேய்கிறது' என்பதைத் தி. மு. கழகத்தவர்கள் மட்டுமல்லாமல், 'இந்து', 'மெயில்', 'டெக்கான் கெரால்டு', 'சுதேசமித்திரன்' போன்ற பெரிய நாளிதழ்களும், அவ்வப்போது தென்னாட்டு அரசுகளின் முதலமைச்சர்களாக வந்தவர்களும்—வந்திருப்பவர்களும், இந்தியப் பாராளுமன்றத்திற்குத் தென்னாட்டிலிருந்து உறுப்பினர்களாகச் சென்றிருப்பவர்களும், இங்குள்ள சட்ட மன்றங்களில் உறுப்பினராயுள்ள பெரும்பாலோரும் எடுத்துரைத்தே வருகின்றனர். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதை அனைவரும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கவே செய்தனர்.

இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்படப்போகும் நடவடிக்கைகள் குறித்தும், ஒதுக்கப்படப்போகும் தொகை குறித்தும் செய்திகள் நாள்தோறும் செய்தித்தாள்களில் அடிபடுகின்றன. திட்டத்தின் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனிக்கும்போது, 'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது' என்ற திகைப்பை மேலும்மேலும் வளர்ப்பதாகத் திட்டம் அமைந்திருக்கின்றதே ஒழிய, திகைப்பை நீக்குவதாக அமையவில்லை. பெரும்பெரும் பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகள் அனைத்தும் வடக்கேயே இதுகாறும் நிறுவப்பட்டதால், தென்னாடு இழந்த வாய்ப்புகள் பலப்பல. அந்த இழந்த வாய்ப்புகளை ஈடுசெய்வதற்கான வழிவகைகள் புதிய திட்டத்தால் ஏற்படவில்லை. இனி நிறுவப்படப்போகும் பெரும் உற்பத்தித் தொழிற்சாலைகளும் வடக்கேதான் நிறுவப்படும் என்பதற்கான சாயல் தெரிகின்றதேயல்லாமல், தென்னாட்டிலும் வட்டார விகிதாச்சாரத்திற்கு ஏற்றபடி நிறுவப்படும் என்பதற்கான அறிகுறி ஏதும் புதிய திட்டத்தில் தென்படவில்லை.

சென்னை அரசியலார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்ச் சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் ரூ. 394 கோடி செலவழிக்கப்படலாம் என்று அறிக்கை வெளியிட்டுள்ளனர். அறிக்கையில் கண்டவைகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால், உள்ள பல்வேறு துறைகளிலும் சற்று உயர்வு காண்பதற்கான திட்டங்கள் தென்படுமே ஒழிய, தென்னாட்டை வடநாட்டிற்கு ஈடாகப் பொறித்தொழில் மயமாக்கும் திட்டம் ஏதும் புலப்படாது. இந்தத் தொகை முழுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்க, சென்னை அரசை, இந்தியப் பேரரசு அனுமதிக்குமா அல்லது தொகையின் அளவைக் குறைக்குமா என்பதும், திட்டங்களை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பை

இந்தியப் பேரரசு முழுவதும் ஏற்றுக்கொள்ளுமா அல்லது பெரும்பகுதிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வருமா அல்லது பெரும்பகுதிப் பொறுப்பைச் சென்னை அரசின்மீதே சுமத்துமா என்பதும் போகப்போகத்தான் தெரியும்.

இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள், மண்ணெண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலைகள். பென்சிலின் தொழிற்சாலை, இரயில்வே என்சின் தொழிற்சாலை, போர்க்கருவித் தொழிற்சாலை, சர்க்கரை ஆலைகள், நெசவு ஆலைகள் போன்ற பல்வேறு பெரும் தொழிற்சாலைகள் இதுவரையில் வடநாட்டில்தான் நிறுவப்பட்டு வருகின்றன; இனியும் அங்குதான் நிறுவப்படும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது திராவிடம் வடநாட்டோடு இணைந்து, டில்லி மத்திய ஆட்சியின்கீழ் இருக்கும் வரையில் திராவிடம் வளர்வதற்கான வழி கிடைக்காது என்பது தெளிவுபடும்.

திராவிடத்தில் எல்லாவகையான வசதிகள் இருந்தும், திராவிடம் பேணி வளர்க்கப்படவில்லை; திராவிடத்தின் வரிப்பணத்தில் வடநாடு வாழும்படி செய்யப்படுகிறது. இந்த அவல நிலையைப் போக்கத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அரும்பாடுபடுகிறது. திராவிடத்தில், தொழில் வளர்ச்சியுறச் செய்வதற்கான வசதிகள் ஏராளம் இருந்தும் அது புறக்கணிக்கப்படுகிறது என்ற உண்மையை "இந்து" தன்னுடைய 19—10—1948 இதழில், "தென்னிந்தியாவின் வளர்ச்சி" என்ற தலையங்கத்தில், கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறது. அவை வருமாறு:

"தென்னிந்தியா விரிந்த கடற்கரைப்பரப்பையும், பல பரந்த துறைமுகங்களையும் கொண்டிருக்கிறது. தென்னிந்தியா போருக்குகந்த தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஏற்ற மிகச்சிறந்த மையத்தளமாக விளங்குகிறது. இங்கு நிலக்கரி இல்லையே என்று அஞ்சவேண்டிய அவசியமில்லை; நீரின் மூலம் ஏராளமான மின்சாரம் உற்பத்தி ஆக்கிக்கொள்வதற்கு ஏற்ற வசதியான இடங்கள் இருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சிமலைகள் ஆண்டுதோறும் ஏராளமான அளவு மழையை வரவழைக்கின்றன. ஆதனைக் கொண்டுசெல்லும் ஆறுகளுக்கிடையே, மிகக்குறைந்த அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய மாதிரியில், ஏற்ற முறையில் அணைக்கட்டுகள் போடலாம்.........நில அமைப்பில் தென்னிந்தியா இந்துமாக்கடலை அடுத்து விளங்குவதால், உலகக்கடல் வாணிகத்துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. தென்னிந்தியா வளர்ச்சியுறச் செய்யப்படவேண்டும் என்பதற்கு இதுவே போதுமான காரணமாகும்.........தென்மேற்குப் பகுதியிலுள்ள மலையிடங்களில், மிக விலைமதிப்புள்ள வணிகப் பொருள்களான தேயிலை, மிளகு, காப்பி, ஏலக்காய் போன்றன ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிராகின்றன. உயர்ந்த உச்சிப்பகுதிகளில் கோதுமையை விளைவிக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள்.........இந்த உண்மைகளையெல்லாம் மனதில் கொண்டு பார்க்கும்போது, தாமோதர்ப் பள்ளத்தாக்குத் திட்டத்தினாலோ அல்லது இராகுட் திட்டத்தினாலோ ஏற்படும் நன்மைகள் அளவுக்கு நன்மை பயக்கக்கூடிய பெரியாறு பள்ளத்தாக்குத் திட்டத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்தவேண்டியது இந்திய அரசாங்கத்தின் கடமையாகும் என்பது தெரிகிறது."

காங்கிரசை ஆதரிக்கும் கொள்கை கொண்ட 'இந்து' இதழின் மேற்கண்ட கருத்துக்கள், நமது கருத்துக்களுக்கு நல்ல வலியூட்டுவனவாகும். இந்தக் கருத்துக்கள் நம்மைத் தவருகக் கருதும் மாற்ருரின் கண்களைத் திறக்க நல்ல முறையிலே பயன்படும் என்றும் எதிர்பார்க்கிருேம்.

திராவிடத்தில் வளம் இருக்கிறது; ஆனால் அதனை வளர்ச்சியுறச் செய்வதற்கான வழி கிடைக்காமல் திகைக்கிருேம்! நமது திகைப்பை நீக்குவதற்கான முறையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் அமையவில்லை! என் செய்வது! திராவிடநாடு திராவிடர்க்கு ஆவதைத் தவிர நமது திகைப்பை நீக்கும் வழி எதுவும் இல்லை!

★★

கருத்துக் கதிர்

இந்திமொழிக் குழப்பம்

"இராஜாங்க அலுவல்களுக்காக இந்தி மொழியை உபயோகித்தல் குறித்து விசேஷமான தப்பபிப்பிராயங்கள் நிலவுவதாகக் காண்கிறது. அரசியல் சட்டத்தின்படி இந்தியே ராஜாங்க பாஷையாக இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது ஆனால் எந்தப் பகுதியில் உள்ளவர்மீதும் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக இந்தியை சர்க்கார் திணிப்பர் என்று இதனால் அர்த்தமில்லை. எந்த மொழியையோ அல்லது மொழிகளையோ ராஜாங்க பாஷையாக வைத்துக்கொள்ள ராஜ்ய சட்டசபைகளுக்கு அதிகாரமுண்டு"—29-7-55 காமராசர் அறிக்கையில்.

"பொதுவாக சர்க்கார் காரியங்கள் நடந்தேற தேசீய பாஷை (இந்தி) யொன்று அவசியமே."

"இந்தக் கழக ஆர்ப்பாட்டங்களுக்கு முன்பே இந்தியை விரைவாகத் திணிப்பதற்கு நாம் உறுதியாக ஆட்சேபம் தெரிவித்துள்ளோம்."

"பிராந்திய பாஷையே போதனாமொழியாக இருக்கும்."

"இந்திப் பிரச்னையை வெறும் போர்வையாகக் கொண்டுதான் கழகத்தார் கிளர்ச்சிகள் நடத்துகின்றனர். இப்போதும் சரி எதிர்காலத்திலும் சரி இத்தகைய இயக்கத்திற்கு அவசியமே இல்லை"—5-8-55-ல் சென்னை சட்டசபையில் நிதிமந்திரி சுப்பிரமணியம் பேச்சில்.

"வெளிநாட்டு சர்வீஸ் போட்டிப் பரிட்சைகளை இந்தியில் எழுதவேண்டியதில்லை என்றும், அது கட்டாயப் பாடமும் அல்ல என்றும் பிரதமர் நேரு தெரிவித்தார். ஆனால் பரிட்சையில் தேறியபின்னர் கட்டாய இந்தி டெஸ்டில் தேறவேண்டும் என்றும் இல்லையேல் பிரஸ்தாப நபர் பதவியில் சிறிதும் முன்னேற்றமடையமுடியாது என்றும் நேரு கூறினர்.

இந்தி தெரியாத வெளிநாட்டு சர்விஸ் சீனியர் அதிகாரிகள் இந்தி கற்குமாறு கோரப்பட்டுள்ளனர். ஆனால் ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பின்னர் இந்தியைக் கற்பது கஷ்டம் என்றார் நேரு.—5-8-55-ல் டில்லிப் பார்லிமென்றத்தில் உறுப்பினர் கேள்விக்கு நேருவின் பதில்.—சுதேசமித்திரன் செய்தி.

"லோக்சபையில் ஆங்கிலம் தெரிந்த அங்கத்தினர்களும் இந்தியிலேயே பேசுகிறார்கள். இந்தி தெரியாத தமிழக அங்கத்தினர்கள் எதுவும் புரியாமல் திணறுகிறார்கள். சபை நடவடிக்கைகளில் பூரணமாகப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் அவர்களும் இந்தி கற்றாகவேண்டும். இந்தியைத் திணிக்க முயற்சிக்கவில்லை என்று பேச்சு மட்டும் இருக்கிறது. எப்படி நம்புவது? மத்திய சர்க்கார் ஊழியத்திலிருக்க விரும்புகிறவர் இந்தி அறிந்தவராக இருக்கவேண்டும் என்ற யோசனை குறித்து சர்வகலாசாலை போர்டு தனது கருத்தைத் தெரிவிக்கும்படி உள்நாட்டிலாகா மீண்டும் வற்புறுத்தியிருக்கிறது. அப்போது சென்னையில் வேலைக்கனுப்பப்படும் மத்திய சர்க்கார் ஊழியர்கள் தமிழ் அல்லது இதர தென் மொழி அறிந்தவராக இருக்கவேண்டும் என்று சென்னை சர்க்கார் வற்புறுத்தினால் தவறென்ன? எம்மொழியையும் நாம் வெறுக்கவில்லை. சென்னை கலாசாலைகளில் இந்தி கற்பிக்கப்படுகிறது. ஆனால் எம்மொழியும் நம் மீது பலவந்தமாகத் திணிக்கப்படுவதையே மறுக்கிறோம்; தீவிரமாக எதிர்க்கிறோம். அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதென்ன? உண்மையில் நடப்பதென்ன? அறியாமையில் மூழ்கியிருக்கும் மக்களுக்குக் கல்வி அறிவைப் புகட்டுவது முக்கியமா? அல்லது இந்தி கற்றுக்கொடுப்பதுமுக்கியமா? இல்லையேல் இரண்டாயிரம் இந்தி ஆசிரியர்களை இங்கு அனுப்புவதில் அவசரமென்ன? ஆங்கிலத்தைப்போல் இந்தியும் தென்னாட்டுக்கு அந்நியமொழிதான். ஆகவே இப்பிரச்னையில் உறுதியான முடிவுகாணவேண்டும். இல்லையேல் கிளர்ச்சியும் குழப்பமுமே ஏற்படும். இப்பிரச்னையில் நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை, அத்தியாவசியமான விஷயங்களில் ஒற்றுமை; சாதாரண விஷயங்களில் வேற்றுமை; ஆனால் அனைத்திலும் பரஸ்பரம் தாராள மனப்பான்மை; இதுவே இன்று நமக்குத் தேவை. பண்டித நேருவால்தான் இன்று நமக்குப் பெருமை. அவரையே கேட்கிறேன்; இந்தி பிரச்னையில் நல்லபடி கவனம் செலுத்துங்கள்"—5-8-55-ல் சென்னை மேல்சபையில் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்களின் பேச்சில்.

"சர்விஸ் போட்டிப் பரிக்ஷைகளில் ஹிந்தியை கட்டாய பாடமாக்கவேண்டுமென்பது குறித்து இச்சர்க்கார் தங்களது அபிப்பிராயத்தை ஏற்கெனவே மத்திய சர்க்காருக்கு தெரிவித்துவிட்டனர். இந்தி பரிட்சை எழுதலாம். ஆனால் சென்னையில் பதவி ஏற்க அனுப்பப்பட்டால் அந்நபர், பிராந்திய பாஷையையும் கற்றுகவேண்டும். அதேபோல இந்தி பேசாதவர்கள் பதவி நிர்வாகத்துக்காக இந்தியை தெரிந்துகொண்டாகவேண்டும். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் இந்தி திணிப்பு கூடாது.''—5-8-55-ல் சென்னை மேல்சபையில் மந்திரி பக்தவத்சலம் அவர்களின் பேச்சில்.

இந்தி பொதுமொழியாவதை யாரோ ஒரு சிலர் தங்கள் சுயநல நோக்கங்களுக்காக எதிர்க்கிறார்கள் என்று கூறிவந்தவர்களின் கண்ணுங் காதும் உறுத்தும் வண்ணம் நாடெங்கும் எதிர்ப்புகள் உருவாகின்றன. எதிர்ப்பு எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் பிறக்கக்கண்டு ஆட்சிபீடமேறியவர்கள், தாங்களும் புரிந்துகொள்ளாமல் பிறரையும் புரிந்துகொள்ள விடாமல் ஏதாவது சொல்லியாகவேண்டுமென்பதற்காக கொள்கையைக் குழப்பமாகவே வெளியிட்டுவருகிறார்கள். அவர்களுடைய விளக்கங்கள் முன்னுக்குப் பின் முரணாகவும் விசித்திரமாகவும் அமைகின்றன.

காமராசர் அறிக்கைப்படி அரசாங்க அலுவல்கள் நடந்தேற ஒரு பொதுமொழியாக இந்தி தேவைப்படுகிறது என்னும்பொழுது அது கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய மொழி என்ற நிலை பிறந்துவிடுகிறதே! இதை உறுதிப்படுத்தும் வகையில் நிதி அமைச்சரின் பேச்சு அமைகிறது. மாநில மொழியே பாடமொழி என்றும், அரசாங்க அலுவல்களுக்கு இந்தி அவசியமே என்றும் கூறுவதோடு அல்லாமல் இந்திமொழி விரைவாகத் திணிக்கப்படுவதை எதிர்ப்பதாகக் கூறுகிறார். ஆக மெல்லமெல்ல காலப்போக்கில் இந்தி திணிக்கப்பட்ட ஒரு மொழியாக வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறார் என்றல்லவா ஆகிறது.

நேருபண்டிதர் கூறியுள்ளபடி இந்தி பதவியில் புகுமுன் கட்டாயமில்லையே தவிர பதவியில் உயர்வுபெற அது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. வெளிநாட்டு சர்விஸ் தேர்வுகளுக்கே இப்படி என்றால் உள்நாட்டுத் தேர்வுகளுடைய தன்மை எப்படி உருவெடுக்கும் என்று எண்ணுவது?

இத்தகு குழப்பமான கொள்கைகளையும் அதை மேலும் குழப்புகிற விளக்கங்களும் அவ்வப்போது வருவது கண்டுதான் டாக்டர் லட்சுமணசாமி அவர்கள் அரசாங்கத்தின் முரண்பாடான கொள்கைகளைக் கண்டித்திருக்கிறார். பேச்சளவில் இந்திமொழி 'கட்டாயமாகத் திணிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டு வந்தபோதிலும் சிறிது சிறிதாக திணிக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். மொழிப் பிரச்சினையைவிட மக்களைக் கவ்வியிருக்கும் அறியாமையை அகற்றுவது தான் முக்கியப் பிரச்சினை என்று இடித்துக் கூறியுள்ளார். நாட்டு ஒற்றுமை என்ற பெயரால் தங்களுடைய ஆதிக்கத்தைப் பிறர்மீது செலுத்தும் போக்கினை அவர்கண்டித்து ஒற்றுமை எந்த அடிப்படையில் உருவாக வேண்டும் என்பதையும் வற்புறுத்தியிருக்கிறார்.

டாக்டர் லட்சுமணசாமி அவர்களின் பேச்சுக்குப் பதிலளிக்க முன்வந்த கனம் பக்தவத்சலமும் திட்டவட்டமாக எதையும் கூறவில்லை. இந்தி பேசாதவர்கள் பதவி நிர்வாகத்திற்காக இந்தியையும் இந்தி பேசுபவர்கள் அதே அவசியத்திற்கு வேறொரு மொழியினையும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது, இந்தி மொழி ஆதிக்கத்திற்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்ட பிறகு அதைச் சமாளிக்கும் நோக்குடன் கூறப்படுகிறதே அல்லாமல் இந்தி மொழி ஆதிக்கத்தைத் தடுக்கவல்ல ஒன்றாகாது. கனம் மந்திரிமார்கள் இந்திமொழியைப் பற்றிப் பேசும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசியிருக்கின்றனர். அரசியல் சட்டப்படி இந்தியே பொதுமொழி என்று விதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் இந்தி மொழி திணிக்கப்படமாட்டாது என்கிறார் காமராசர்; மெதுவாகத்தான் திணிப்போம் என்கிறார் சுப்ரமணியம். இந்திமொழித் திணிப்பு கூடாதென்கிறார் பக்தவத்சலம். ஒருவருடைய கூற்று மற்றவருடைய கூற்றுக்கு எங்கே பொருந்துகிறது?

இப்படி விளக்கமில்லாமல் குழப்பிவிட்டு வீம்புக்காக "இந்தக் கழக ஆர்ப்பாட்டங்களுக்குமுன்பே இந்தித்திணிப்பு கூடாது என்று கூறிவிட்டோம்'' என்கிறார் சுப்பிரமணியம். இந்தி மொழிக்கு ஏற்படும், எதிர்ப்பைக் காண்கிறார்: பாபம்! கோபம் பிறக்கிறது. "இந்திப் பிரச்சினை என்ற போர்வையில் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன, அவைகளுக்கு எப்போதும் அவசியமில்லை'' என்று கூறிடும் நிதி அமைச்சருக்கு, "**ஆங்கிலத்தைப் போல இந்தியும் தென்னாட்டுக்கு அன்னியமொழிதான்** ஆகவே இப்பிரச்னையில் உறுதியான முடிவு காணவேண்டும். இல்லையேல் கிளர்ச்சியும் குழப்பமுமே ஏற்படும்.'' என்ற டாக்டர் லட்சுமணசாமி அவர்களின் பேச்சையே காணிக்கையாக்குகிறோம்.

447

வெள்ளெழுத்து

பழைய நாட்களில், தமிழகத்தில், வயது ஏற ஏறக் கண்பார்வை மழுங்கிப் போதலை வெள்ளெழுத்து என்று குறிப்பிட்டுவந்தனர்.

பார்வை மழுங்கிய கண்ணுக்கு, எழுதப்பட்ட எழுத்துக்களெல்லாம் தெளிவாகப் புலப்படாமல், ஒரே வெள்ளையாகத் தோன்றுமாதலால், அப்படி ஏற்படும் தன்மையை வெள்ளெழுத்து என்று குறிப்பிட்டனர் போலும்.

கண் பார்வை மழுங்குவதும், அந்தக் குறைபாட்டை நீக்கிக்கொள்ள மூக்குக்கண்ணாடி அணிந்துகொள்வதும், இற்றைக்கால நாகரிகத்தின் கொடிய விளைவுகளாகும் என்றும், பண்டைக்காலங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகளுக்கு அறவே இடமில்லை என்றும் பலர் தவருகக் கருதிக்கொண்டும், பேசிக்கொண்டும் இருக்கிருர்கள்.

கண்பார்வை மழுங்குவது என்பது, எல்லாக் காலங்களிலும் இருந்துவரும் ஒன்றேயாகும். பண்டைக்காலங்களைவிட இற்றைக்காலத்தில் உற்றுநோக்கும் வேலைகள் கண்ணுக்கு மிகவாக ஏற்படுவதாலும், தாக்கும் மின்னொளிக் கதிர்களை எதிர்நோக்க வேண்டிய இன்றியமையாமை கண்ணுக்குப் பெரும் பொழுது ஏற்பட்டுவிடுகின்றபடியாலும், பார்வை விரைவில் மழுங்குவதற்கான வழி ஏற்பட்டுவிடுகிறது. பண்டைக்காலத்தில், ஓயாமல் உற்று நோக்கம் செலுத்த வேண்டிய வேலைகள் மிகமிகக் குறைவு; அதுமட்டுமல்லாமல், பெரும்பொழுது குளிர்ச்சியான இயற்கைக் காட்சிகளைக் கண்டுகொண்டிருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். ஆகையாலே கண்பார்வை மழுங்குவது சிறிது காலங்கடந்து அவர்களுக்கெல்லாம் வந்தது. அவ்வளவுதானே ஒழிய, எவ்வளவு வயதானலும் பார்வை அறவே மழுங்கவில்லை என்று கூறுவதற்கில்லை. இந்த நாட்களில் 'எந்த வயதில் கண் எவ்வளவுதான் மழுங்கிப் போவதாக இருந்தாலும், அந்தக் குறைபாட்டை எளிதில் நீக்குவதற்கான மருத்துவ சிகிச்சைகளும், மூக்குக் கண்ணாடி போட்டுக்கொள்ளும் முறையும் ஏற்பட்டுவிட்டன. பண்டை நாட்களில் கண் மழுங்கினல் மழுங்கினதுதான்; அந்தக் குறைபாட்டை அவ்வளவு எளிதில் நீக்கிக்கொள்ள முடிந்ததில்லை.

பண்டைநாட்களிலும் நாற்பது அல்லது ஐம்பது வயதானவுடன் எல்லோர்க்கும் வெள்ளெழுத்து ஏற்படவே செய்திருக்கிறது. அப்படி வெள்ளெழுத்து ஏற்படும்போது, பிறரைக் கொண்டு பகுக்கச் சொல்லுதல்—எழுதச் சொல்லுதல்—அறிந்து சொல்லச்சொல்லுதல்—தெரிந்து செய்யச் சொல்லுதல் போன்ற முறைகளின்மூலம் வாழ்நாட்களைக் கடத்திவந்திருக்கின்றனர். எழுபது, எண்பது, தொண்ணூறு, நூறு என்று வயது ஏறும்போது பெரும்பாலோர் குருடர்களாகத்தான் உலாவியிருந்திருக்கிருர்கள்.

பண்டைக்காலங்களில் எல்லா நாடுகளிலுமுள்ள பெரும்புலவர்களும், எழுத்தாளர்களும் தங்களுடைய வயதான காலத்தில் பிறரைக் கொண்டுதான் எழுதியும் படித்தும் வந்திருக்கின்றனர்.

பண்டைக்காலத்தில், பார்வையைப் பெறுவதற்குக், குறிப்பிட்ட சில பேர்போனவர்கள் சிலபல முறைகளைக் கையாண்டுபார்த்திருக்கின்றனர்.

உரோம் நாட்டுப் பேரரசனுன நீரோ கண்பார்வை இழந்தபோது, சர்க்கசு வேடிக்கைகளையும் விளையாட்டுக்களையும் ஒரு பெரிய பச்சைக் கல்லின்மூலம் பார்த்து மகிழ்ந்திருக்கிருன். குறைந்த கண்பார்வையை, அந்தப் பச்சைக்கல், கண்ணாடிபோலிருந்து நிறைவு செய்துதந்திருக்கிறது.

மேரியா அந்தாய்னித்தே என்ற பிரெஞ்சு நாட்டுப் பேரரசி தன் கண்பார்வை மழுங்கியதைச் சரிசெய்துகொள்ள, ஒரு கண்ணாடிக் கல்லைத் தன் விசிறியிலே பொருத்தி வைத்துக்கொண்டு, அதன்மூலம் நன்கு பார்த்துக் கொண்டாளாம்.

மூக்குக் கண்ணாடி கண்டுபிடிப்பதற்கு முன்னால், சிறிது கண்பார்வை மழுங்கியவுடன், கண் அடியோடு கெட்டுப்போய்க் குருடராகி விடுவோமோ என்ற அச்சம் பண்டை நாட்களில் எல்லோர்க்கும் எங்கும் இருந்தே வந்திருக்கிறது.

வலிவு குறைந்தவை, மருத்துவ சிகிச்சை செய்யப்பெருதவை, மிகுதியான வேலைக்கு ஆளானவை போன்ற கண்கள் விரைவில்

காவலன்-ஒரு கைதி!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மணி ஆறு ஆகியது, மன்னனைக் காணச் சென்ற சபைத்தலைவர் மூனியர் இன்னும் திரும்பவில்லை. ரொட்டியும் கோதுமையும் பற்றி அரசனுடைய வாக்குறுதியை எழுத்து மூலம் வாங்கிவரச்சென்ற பன்னிரண்டு பெண்களும் இன்னும் திரும்பவில்லை. அவர்களை எதிர்பார்த்து, பிரெஞ்சு அசெம்பிளிக்கு வெளியில் பாரிஸ் நகரத் தாய்மார்கள் காத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் காத்துக்கொண்டிருந்தனர்; ஆனால் அடைபட்டுக்கிடந்த வானம் காத்துக்கொண்டிருக்கவில்லை. மப்பு சிறு தூறலாகி, மழைபெய்யத் தொடங்கியது.

கடிகாரம் ஏழுமணியை ஒலித்தது. அரசனைப் பேட்டிகாணச் சென்றவர்கள் இன்னும் வரவில்லை. மழையும் பலமாகப் பெய்யத் தொடங்கியது. வெளியிலிருந்த பெண்கள் அசெம்பிளி கட்டிடத்தின் அருகில் நெருங்கி, கதவுகளின் வழியாக எட்டிப்பார்த்து, உள்ளே நடப்பதைக் கவனித்தனர்; பின் சிறுகச் சிறுக உள்ளே நுழைந்து, ஓரங்களில் நின்றனர். சிறிது நேரத்துக்குள் வெளியிலிருந்த கூட்டத்தில் பெரும்பகுதி அசெம்பிளி கட்டிடத்துக்குள் நிறைந்துவிட்டது.

அசெம்பிளி என்ன செய்துகொண்டிருக்கிறது? உள்ளே நுழைந்த பட்டினிப் பட்டாளத்தினர் கேட்டுக்கொண்டனர். அவர்களுக்குத் தெரிந்தவரை, ஒவ்வொருவராக எழுந்து பேசுகிறார்கள். ஒருவர் பேசி முடிந்ததும், மற்றொருவர் பேச எழுந்துவிடுகிறார். இவ்வளவு காரசாரமாக ஏன் பேசிக்கொண்டிருக்கிறார்கள்? அவைக்குள் வந்த "புதிய அங்கத்தினர்களுக்கு"—பட்டினிப் படையினருக்குப் புரியவில்லை. மிராபோ போன்ற ஓரிரு பேச்சாளர்கள் பேசுவது அந்தக் கூட்டத்தினருக்குப் பிடித்திருந்தது. இருந்தாலும், இவ்வளவுபேர்கூடி, இடைவிடாமல் பேசிக்கொண்டிருப்பது வீண்வேலையாகப் பட்டது.

"நீண்ட பேச்சுகள் வேண்டாம். எங்களுக்கு ரொட்டி வேண்டும்" பட்டினிப் பட்டாளத்தைச் சேர்ந்த ஒருத்தி கூவினாள். அசெம்பிளியை நடத்திக்கொண்டிருந்த துணைத்தலைவர், அமைதியை நிலைநாட்ட மிகவும் பாடுபட்டார். சபைத்தலைவர் மூனியர் வந்துவிட்டால் தான் நாற்காலியிலிருந்து இறங்கிவிடலா

பார்வையிழந்துவிடுகின்றன. படித்தல், எழுதுதல் போன்ற வேலைகளில் மிகுதியாக ஈடுபட்டிருக்கும் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், ஓவியர்கள், சிற்பிகள் ஆகிய இவர் போன்றவர்கள் விரைவில் பார்வையை இழந்துவிட நேரிடுகிறது.

கிரேக்க நாட்டுப் பெரும்புலவனை ஓமரும் (Homer), ஆங்கிலநாட்டுப் பெரும்புலவனை மில்டனும் (Milton) தத்தம் வாழ்க்கையின் பிற்பகுதியைக் குருடர்களாக இருந்தே கழித்தனர். சியார்சு பெடரிக் ஆண்டல் (George Frederick Handel), சொகன் செபாசிடியன் பாச்சு (Johann Sebastian Bach) ஆகிய இரண்டு பெரிய பாட்டு இயற்றும் கவிஞர்களும் சிறுவயதிலேயே கண்பார்வையை இழந்தனர்.

தமிழகத்தில்கூட இரட்டையரிலே ஒருவரும், அந்தகக் கவி வீரராகவமுதலியாரும் கண்பார்வையை இழந்த நிலையிலேயே செய்யுட்கள் இயற்றினர். அந்த நாட்களில் கண்பார்வை இழந்த நிலையிலும் பணியாற்ற முடிந்தவர்களும்—முன்வந்தவர்களும் மிக மிகச் சிலரேயாவர்.

இந்த நாட்களில் மூக்குக்கண்ணாடி வந்து பெரும்பாலான சான்றோர்களையும், வல்லுநர்களையும் உலகத்திற்குக் காப்பாற்றிக்கொடுத்திருக்கிறது. இல்லையாயின் வெள்ளெழுத்து என்னும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுப் பல சான்றோர்கள், போதுமான அளவுக்கு உலகத்திற்குப் பயன்படாமல் போயிருந்திருப்பார்கள்!

மென்று, அவர் மூனியர் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தார். சபையில் கூச்சல் அதிகமாகிக்கொண்டிருந்தது. உள்ளே நுழைபவர்களை யாராலும் தடைசெய்ய முடியவில்லை. இன்னும் மூனியர் வரவில்லை. துணைத் தலைவர் மேசையைத் தட்டி, "அமைதி, அமைதி" என்றார். அசெம்பிளியில் ஆரவாரமும் கூச்சலும் இருந்தது.

அரண்மனையில் அமைதி இருந்தது, அங்கு ஆரவாரமோ, கூச்சலோ கிடையாது. ஆனால் இருவர் மூவராகக் கூடி—பிரபுக்கள், மந்திரிகள், மதியூகிகள் கூடிப் பேசிக்கொண்டனர். அவர்கள் மெதுவாக—குசுகுசுவெனப் பேசிக்கொண்டனர். ஆனால் கூச்சல் மிகுந்த அசெம்பிளியில் காணப்படாத கலவரம், அமைதியின்மை அந்த மெதுவான பேச்சுகளில் இருந்தது.

"பாரிஸ் நகரம் படையெடுத்து வந்துவிட்டது."

"மற்றொரு படையும் புறப்படுகிறதாம்!"

"பதினாயிரம் துப்பாக்கிகள்!"

"இருபது பீரங்கிகள்!"

செய்திகள்—வதந்திகள் அடிக்கடி வந்துகொண்டிருந்தன. அரண்மனைவாசிகள் கவலையுடன் உலவினர். அரண்மனையைச் சுற்றிலும் கட்டுக்காவல்கள் அதிகமாக்கப்பட்டன.

"சண்டைக்குத் தயாராக இருக்கவேண்டும்!"

"மன்னனுடைய படை மற்றொன்று நாளைக் காலை இங்கு வந்துவிடும்!"

"கூச்சல் போட்டு கும்பலாக வந்தாலும், இரண்டு துப்பாக்கி வெடித்தால் போதும், அலறியடித்துக்கொண்டு ஓடிவிடுவார்கள்."

"பாஸ்டிலியை அவர்கள் பிடித்தபொழுது, பீரங்கிகள் வெடித்தும் அவர்கள் பயமில்லாமல் முன்னேறிவந்தார்கள்!"

"எல்லா பயமும் போய்விட்டது!"

பிரபுக்கள் பேசிக்கொண்டனர்.

நிலைமையை எப்படிச் சமாளிப்பது? மந்திரிகள் விவாதித்துக்கொண்டனர்.

"மன்னன் வார்செய்லைக் காலிசெய்துவிட்டு, தூரத்திலுள்ள ஒரு நகருக்குப் போய்விடவேண்டும்,"

"அதாவது ஓடிவிடவேண்டும்."

"எப்படியாவது வைத்துக்கொள். அந்த இடத்தில் பலமான படையைச் சேர்த்துக்கொண்டு, பின் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தவேண்டும்."

இவ்வாறு சில திட்டங்கள் உருவாகிக்கொண்டிருந்தன. அதற்குள்ளாகவே, அரண்மனை கோச் வண்டிகள் தயாராக வைக்கப்பட்டு, அரண்மனையைவிட்டு வெளியேறுவதும், பின் திரும்பிவருவதுமாகப் பழக்கப்படுத்தப்பட்டன. திடீரென்று வெளியேறவேண்டி வந்தால்—ஓடவேண்டிவந்தால் முடிகிறதா என்று பார்க்கப்பட்டது.

அசெம்பிளி கட்டிடத்தில் கூச்சல் அதிகமாகிக்கொண்டிருந்தது. பெண்களின் பேச்சைத் துணைத்தலைவரால் அடக்கமுடியவில்லை. யாரால்தான் முடியும்? பட்டினிப் பட்டாளம் பேசுகிறது—பட்டினி பேசுகிறது. பல தலைமுறைகளாக ஊமையாக்கப்பட்ட ஏழ்மை, அங்கே பேசத்தொடங்கிவிட்டது. அந்தப் பேச்சை அடக்க சபைத்தலைவரால்—அதுவும் துணைத்தலைவர்—முடியுமா? அந்தப் பேச்சின் எதிரொலி மன்னனுடைய அரண்மனையில் பயங்கரமாகக் கேட்டது.

கடைசியாக மணி எட்டு இருக்கும்பொழுது மன்னனைக் காணச் சென்ற அங்கத்தினர்களில் ஒருவர் மட்டும் திரும்பிவந்தார். "சபைத்தலைவர் மூனியர் மன்னனுடன் பேசிக்கொண்டிருக்கிறார். நாம் நிறைவேற்றிய மக்கள் சமவுரிமைச் சட்டத்தை மன்னன் அங்கீகரித்துவிடுவார்போலிருக்கிறது. ஆனால் பேச்சு இன்னும் முடியவில்லை," வந்தவர் அசெம்பிளி அங்கத்தினர்களுக்கு இந்தச் செய்தியை அறிவித்தார். அசெம்பிளியில் அங்கத்தினர்கள் மட்டுமல்ல, பட்டினிப் பட்டாளத்தினரும் இருக்கிறார்கள். அவர்கள் அனுப்பிய தீர்மானம் என்னவாயிற்று?"

அரசன் கையெழுத்திட்ட கடிதம்—"கோதுமையும் ரொட்டியும் கட்டுப்பாடின்றி, தாராளமாக வழங்கப்படவேண்டும்" என்ற அரசனுடைய உத்திரவு காட்டப்பட்டது, மன்னனுடைய கடிதத்தைக் காட்டியதும், பெண்கள் முதலில் ஆரவாரித்தனர். பின் ஒரு சந்தேகம் வந்தது, கோதுமையும், ரொட்டியும் இனி கிடைக்கும். ஆனால் விலையேறிப்போய்விட்டால்......? அந்த வியாபாரிகள் விலைகளை உயர்த்தத் தயங்கமாட்டார்கள்.

அசெம்பிளி உடனே ஒரு அவசரச்சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி, ரொட்டி, மாமிசம் முதலியவற்றின் விலைகள்

நிர்ணயிக்கப்பட்டன். அர்ச்னுடைய உத்தரவுப்படி, உணவுத்தானியங்களை மறைத்து வைப்பது குற்றம். அசெம்பிளி சட்டப்படி, உணவின் விலையை உயர்த்துவது குற்றம்.

பட்டினிப் பட்டாளத்திற்குத் தலைமை வகித்துவந்த மெய்யார்த் என்பவனும், மற்றும் சில பெண்களும் உடனே பாரிசுக்குப் புறப்பட்டனர்.

அசெம்பிளியில் குழப்பம் அதிகமாகிக் கொண்டிருந்தது. அங்கத்தினர்கள் ஒவ்வொருவராக நழுவிக்கொண்டிருந்தனர். நின்றுகொண்டிருந்த பெண்கள் அங்கத்தினர் இடங்களில் உட்கார ஆரம்பித்தனர்.

அரண்மனையில் கவலைகள் உலவிக்கொண்டிருந்தன. படையொன்று வருகிறது, இன்னும் சிறிது நேரத்தில். குதிரை வீரர்கள் செய்திகளைக் கொண்டுவந்தனர். மிகக் கலவரமான இரவு!

மன்னனுடைய அறையைவிட்டு, அசெம்பிளித் தலைவர் மூனியர் வெளிவந்தார். ஆறு மணி நேரம் பேச்சு நடந்தது. கடைசியாக, அசெம்பிளி நிறைவேற்றிய, மக்கள் சமஉரிமைச் சட்டத்தை அரசன் ஏற்றுக்கொண்டுவிட்டான். மிக மகிழ்ச்சிகரமான செய்தி! மக்கள் சபைக்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றி! இந்த முடிவைக் காத்துக்கொண்டிருக்கும் அசெம்பிளி அங்கத்தினர்களிடம் தெரிவிக்க மூனியர் வேகமாக வந்தார்.

அசெம்பிளிக் கட்டிடத்திலிருந்து சத்தம் வந்துகொண்டிருந்தது. அரசன் கையெழுத்தான சட்டத்தைக் கையிலெடுத்து, "அங்கத்தினர்களே! மகிழ்ச்சிகரமான செய்தி!" என்று கூறிக்கொண்டு மூனியர் அசெம்பிளிக்குள் முகமலர்ச்சியுடன் நுழைந்தார். மறுகணம் அவர் முகம் மாறுதலடைந்தது. அசெம்பிளியின் கோலத்தைப் பார்த்ததும்.

அசெம்பிளியில் அங்கத்தினர்கள் யாரையும் காணோம். முழுவதும் பெண்கள் நிறைந்திருந்தனர். அவர்கள் ஒரு 'போலி' அசெம்பிளியை நடத்திக்கொண்டிருந்தனர், சந்தைக் கடையில் காய்கறி விற்கும் ஒரு பெண், அவைத் தலைவர் நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்திருந்தாள். புதிய சட்டமொன்றை ஒரு பெண் கொண்டுவந்தாள், அதை ஆதரித்தும், எதிர்த்தும் பல பெண் "அங்கத்தினர்கள்" பேசிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் பேசும்பொழுதும், கேலியும் எதிர்ப்பும், சிரிப்பும், கைதட்டலும் இருந்தன. "அசெம்பிளி" நடவடிக்கைகள் கேலிக்கூத்தாக்கப்பட்டன, ஒரு காலத்தில், பிரபுக்கள், மதக்குருமார்கள், அரசகுடும்பத்தினர் இவர்கள் மட்டுமே நுழைய அருகதையுடையவர்கள் என்று இருந்ததுபோய், இப்பொழுது சாமான்யர்கள் நுழைந்து பொழுதுபோக்காகப் பேசுகிறார்கள். பட்டாடைகள் புரண்ட இடத்தில், கந்தலாடையினர்! வைரங்கள், அருமணிகள் ஒளிவிட்ட இடத்தில் இருண்ட உருவத்தினர். அரசன் அமரக்கூடிய உயர்ந்த நாற்காலியில் யாரோ ஆண்டி! அரசி உட்காரும் இடத்தில் அங்காடி தூக்கும் ஒரு பரட்டைத்தலை! அதற்குமுன் அந்த மண்டபம், அவ்வளவு சாமான்யர்களை—ஏழை பாழைகளைப் பார்த்ததேயில்லை.

மூனியர் மிகவும் கஷ்டப்பட்டு, தனது நாற்காலியிலிருந்த பெண்ணைக் கீழே இறங்கச் செய்து, அதில் உட்கார்ந்தார். அசெம்பிளி மணி அடிக்கப்பட்டது. அத்துடன் கூடியிருக்கும் பெண்களுக்காக உணவு கொண்டுவருமாறு சபைத்தலைவர் உத்தரவிட்டார். பணியாட்கள் நான்குபக்கத்திலும் தேடித் திரிந்து உணவுகளை வாங்கி பறிமுதலே செய்து கொண்டுவந்தனர்.

அசெம்பிளி கட்டிடம் சாப்பாட்டு கூடமாகியது. பேசுவதில் காட்டிய விறுவிறுப்பைவிட அதிகமான அளவை சாப்பாட்டில் பெண்கள் காட்டினர்.

அசெம்பிளி மணி அடிக்கப்பட்டதால், அங்கத்தினர்கள் வந்தார்கள். கூட்டம் அதிகமாக இருந்ததால், மிக நெருக்கிக்கொண்டு ஒரு நூறுபேர்கள் மட்டும் உள்வந்தார்கள். அவர்களில் பலருக்கு உட்கார இடங்கிடைக்கவில்லை. முதலில் இருந்த சில வரிசைகளைக் காலிசெய்து, அவர்களுக்கு இடந்தரப்பட்டது.

அசெம்பிளி நிறைவேற்றிய சட்டத்தை அரசன் ஏற்றுக்கொண்ட செய்தியை மூனியர் அங்கத்தினருக்கு அறிவித்தார். அதற்குப் பிறகு, பிரெஞ்சு நாட்டு பினல்கோடு சட்டத்தைத் திருத்துவதுபற்றி சபை யோசிக்குமென்று சபைத்தலைவர் தெரிவித்தார். அங்கத்தினர்கள் பேச ஆரம்பித்தனர். அவர்களைச் சூழ்ந்துள்ள பெண்கள் கூட்டம் சிறிது நேரம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டது. சட்டம்—திட்டம் — திருத்தம்—சட்டம்........ ஏதேதோ திருப்பித் திருப்பிப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

"பினல் கோடு சட்டத்தைப் பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்? நமக்கு வேண்டியது ரொட்டி!" ஒருத்தி எழுந்து கூவினாள்.

பெண்களெல்லாம் கைதட்டினார்கள். சபைத் தலைவர் மேசையைத் தட்டினார்.

"இப்படிச் சத்தமிட்டு அசெம்பிளியின் நடவடிக்கைகளைத் தடைசெய்யாதீர்கள்!" என்று ஒரு அங்கத்தினர் எழுந்து, பெண்கள் கூட்டத்தைப் பார்த்து கண்டிப்புடன் தெரிவித்தார். பெண்கள் அதற்கும் கைதட்டினார்கள்.

மணி பன்னிரண்டாகிவிட்டது. நடுநிசி. அப்பொழுதும் அரண்மனையில் இருப்பவர்கள் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்தனர். முப்பதினாயிரம் காவல் வீரர்களுடன் லாபெய்த் என்பவன் வருகிறான் என்ற செய்தி வந்தது. லாபெய்த் தேசிய படைக்குத் தலைவனாக, அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். ஆதலால் அவன் மன்னன் பக்கம் இருப்பானா, அல்லது மக்கள் பக்கம் இருப்பானா என்று அரண்மனைவாசிகளுக்குத் தெரியவில்லை. மக்கள் கூட்டத்தைப் பார்த்து, மன்னன் மட்டுமல்ல அசெம்பிளி அங்கத்தினர்களும் பயந்துகொண்டிருந்தனர். மக்களின் வீண் அட்டகாசத்திலிருந்து மன்னனையும், அசெம்பிளியையும் காக்கவேண்டுமென்று லாபெய்த்துக்குச் செய்தி அனுப்பப்பட்டது.

படைவீரர்கள் அணிவகுத்துவரும் முரசொலி சத்தம் கேட்டது. லாபெய்த் படை வார்சேயல் பக்கம் வந்துவிட்டது, படையை நிற்கச்செய்து படைத்தலைவன் முதலில் அசெம்பிளிக்கு வந்தான். அங்கு இருந்த நிலையைக் கண்டதும், வெளிவந்து தனது படையை அரண்மனையை நோக்கி அழைத்து வந்தான். அப்பொழுது அவனுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட முந்நூறு படைவீரர்கள் இருந்தனர்.

அரண்மனைகள் கதவுகள் திறக்கப்பட்டன. படைவீரர்களின் வருகையை எதிர்பார்த்து, பிரபுக்கள், மந்திரிகள், அரசகுடும்பத்தினர் எல்லோரும் வழியில் காத்திருந்தனர். லாபெய்த் அசெம்பிளியின் நம்பிக்கையையும், மக்களிடம் மதிப்பையும் பெற்றவன், எனவே அவன் அரண்மனையைப் பாதுகாக்க வந்தால், அவனிடம் வைத்துள்ள மதிப்பால் அரண்மனைவாசிகள் தப்பிக்கலாம்.

லாபெய்த் அரண்மனைக்குள் நுழைந்ததும், பெருந்த ஆரவாரத்துடன் பிரபுக்கள் அவனை வரவேற்றார்கள். லாபெய்த் எல்லோருக்கும் வணக்கந் தெரிவித்து, மன்னனிடம் சென்று பாரிஸ் நகரத்தின் நிலைபற்றிச் சொன்னான். அரண்மனைக்குள் லாபெய்த் மட்டும் வரவில்லை. அவனுடன் பாரிஸ் நகரப் பிரதிநிதிகள் இருவர் வந்திருந்தனர். பாரிஸ் நகர மக்கள் நான்கு கோரிக்கைகளை மன்னனிடம் தெரிவிக்கச் சொல்லியிருந்தனர். அவையாவன; (1) லாபெய்த் தலைமையில் உள்ள தேசியப்படைதான் மன்னனைச் சுற்றி இருக்கும் உரிமை அடையவேண்டும். (2) பாரிஸ் நகருக்கு உணவு கிடைக்கும்படிச் செய்யவேண்டும். (3) விசாரணையின்றி சிறையில் வாடுபவர்களுக்கு நீதிபதிகளின் முன் வாதாட வசதி தரவேண்டும். (4) மேன்மை தங்கிய மன்னர், பாரிஸ் நகருக்கு வந்து அங்குள்ள அரண்மனையில் இருக்கவேண்டும்.

முதல் மூன்று கோரிக்கைகளுக்கு அரசன் உடனே இணங்கிவிட்டான். நான்காவது கோரிக்கைக்குச் சரியாக பதில் சொல்லவில்லை. சரி என்றோ, முடியாது என்றோ முடிவான பதிலைத் தரவில்லை மன்னனுக்குக் காவலாகத் தேசியப்படை இருக்கவேண்டுமென்று மக்கள் கேட்டுக்கொண்டதற்குக் காரணம், காவற்படை என்ற பெயரில் பிரபுக்களையும் படைவீரர்களையும் சேர்த்து பெரிய படையைத் தயாரித்து, அதன் மூலம் மக்களை மிரட்டப் போகிறார்கள் என்ற பயம் மக்களுக்கு இருந்தது. எனவே மக்களுக்கு நம்பிக்கையாயிருந்த தேசியப்படை மன்னனைச் சுற்றி இருக்கட்டுமெனக் கூறினார்கள். பாரிஸ் நகரைவிட்டுத் தள்ளி, பன்னிரண்டு மைல்களுக்கு அப்பால் வார்சேயல் அரண்மனை இருக்கிறது. பிரபுக்களும், படைத்தலைவர்களும், அரசகுடும்பத்தினருடன் சேர்ந்து, மக்களுக்கு எதிராகச் சதி செய்வதாக மக்கள் அடிக்கடி நினைத்தார்கள். வார்சேயலில் என்ன நடக்கிறதென்று அவர்களுக்குத் தெரியாது. ஏதாவது ஆபத்துக்கள் வந்தால் வார்சேயலில் பிரபுக்கள் கூடி திட்டமிட்டதாகவே மக்கள் முடிவுசெய்தனர். வார்சேயல் இருக்கும் திக்கே அவர்களுக்கு வெறுப்பைத் தந்தது. எனவே மன்னன் பாரிஸ் நகருக்கு வந்து தங்கட்டும் என்ற வேண்டுகோள் மக்களிடமிருந்து எழுந்தது, பாரிஸ் நகரத்துக்குள் போய்விட்டால், மக்களிடம் தப்ப முடியாதபடி சிக்கிக்கொள்வோம் என்ற முன்னறிவிப்பு அரசனுக்கு இருந்தது. ஆனாலும், "பாரிசுக்கு வரமுடியாது, வார்சேயலில்தான் இருப்பேன்!" என்று துணிந்துகூறவும் மன்னனால் முடியவில்லை. அந்த அளவு மன்னனுடைய பலம் குறைந்திருந்தது—பாரிஸ் நகரப் பிரதிநிதிகள் மக்களின் தீர்மானங்களைத் தெரிவித்ததும், நான்காவது வேண்டுகோளுக்கு மன்னன் சரியானபதில் கொடுக்காமல் நிறுத்திக்கொண்டான். அன்றைய இரவு

கழிந்தது; பயம் கலவரம், நம்பிக்கை, சந்தேகம் இவைகள் அ..ண்மனைக்குள்ளிருப்பவர்களின் உறக்கத்தில் படிந்திருந்தன.

மறுநாள் காலை விடிந்தது. அரண்மனைக் கதவுகள் திறக்கப்படவில்லை. அரண்மனையைச் ..ற்றிலும் பாதுகாப்பு அதிகமாக்கப்பட்டது. மன்னனுடைய சொந்தக் காவல் வீரர்கள், துப்பாக்கி தாங்கியவண்ணம் வெளியில் அணிவகுத்து நின்றனர். முதல் நாள் இரவு அசெம்பிளியில் காலங்கடத்திய பட்டினிப்பட்டாளம் — அரண்மனையைச் சூழ்ந்து உலவிவந்தது.

பட்டினிப் பட்டாளத்தினரில் பலர், இப்பொழுதுதான் முதல் தடவையாக அரண்மனையைப் பார்க்கிறார்கள். உள்ளே போக முடியாததால், பார்த்தவர்கள் சொல்ல, மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

“அதோ! அந்த இடம்தான் நடனமாடும் இடம்! பளிங்கால் இழைக்கப்பட்ட மண்டபம்! பொன் சங்கிலியில் தொங்கும் வெள்ளி தட்டுகளில் விளக்குகள் ஏற்றப்படும்!”

“ஆ!”

“ஆமாம்! எங்குபார்த்தாலும் அலங்காரம் இருக்கும்! அதற்குப் பக்கத்தில் அரசனுடைய அரண்மனை! சற்று தூரத்தில் அரசி மேரி அன்தாய்னெட்டின் அரண்மனை!”

அரசியின் பெயரைக் கேட்டதும், பலர் முகத்தில் கோபம் எழுந்தது.

“அந்த அரண்மனையைக் கட்ட முப்பது லட்சம் செலவாம்.”

“அது மட்டும், அலங்காரம் செய்ய பத்து லட்சம்!”

“அவள் அரண்மனையில் ஒருநாள் நடனம் என்றால், கேளிக்கைக்கு மட்டும் ஐம்பதினாயிரம், ஒருலட்சம் ஆகுமாம்!”

“திராட்சை ரசம் கீழே ஓடும், தின்பண்டங்களை கூட்டி ஒதுக்குவார்கள்!”

“இங்கே இப்படி நடந்தால் பாரிஸ் நகரத்தில் பஞ்சம் ஏன் வராது!”

“அதோ! ஒரு தோட்டம் அழகாக இருக்கிறதே!”

“அந்தத் தோட்டம் நாய்களுக்காக ஏற்படுத்தப்பட்டது! வேட்டையாடுவதற்காக இருநூறு நாய்களை அரண்மனையில் வளர்க்கிறார்கள்! அவைகளுக்காகத் தினம் பத்து மூட்டை கறி—ஒரு வண்டி நிறையப் போகும்.”

“பத்து மூட்டைக் கறி!”

வெளியில் கூடியிருந்த ஆண்கள், பெண்கள் அரண்மனையைப்பற்றி விதவிதமாகப் பேசிக்கொண்டனர். பார்க்காதவர்களும் பார்த்தவர்கள்போல வர்ணித்தார்கள். அதைக் கேட்பவர்கள் பார்த்தவர்கள்போலாகிவிட்டார்கள்.

வெளியில் உலவிக்கொண்டிருப்பவர்கள், வேடிக்கையாகச் சுற்றிவந்துகொண்டிருந்தார்கள். ஆனால் அரண்மனைக்குள்ளிருப்பவர்களுக்குப் பயம். பலகணிக் கதவுகளைத் திறந்து பார்க்கும்பொழுது வெளியில் மொய்த்துக்கொண்டிருக்கும் மக்கள் தெரிந்தனர், கூட்டங் கூட்டமாகப் பேசிக்கொள்வது, திட்டங்கள் தீட்டுவதுபோலிருந்தது. அதிலும் சிலர் அடிக்கடி அரண்மனையைச் சுட்டிக்காட்டி ஒரு கூட்டம் ஏன் பேசுகிறது? மற்றொரு கூட்டம் அரசியிருக்கும் மாளிகையைப் பார்த்தவண்ணம் பேசிக்கொண்டிருப்பது எதற்காக? அரண்மனைக் கதவுகளுக்குத் தாழ்ப்பாள்கள் இரட்டிப்பாக்கப்பட்டன, வழிகளில் தடைகள் போடப்பட்டன, வெளியில் நின்ற காவல்காரர்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி கட்டளை தரப்பட்டது.

ஒரு காவல் வீரனுக்கும், ஒரு கூட்டத்துக்கும் பூசல் விளைந்தது. காவல் வீரன் கூட்டத்திலிருந்த ஒருவனை எட்டிப்போகும்படி கட்டளையிட்டான். அதற்குக் கூட்டத்தினர் கேலி செய்தனர். பேச்சு வலுத்தது, வசைவுகள் பரிமாறப்பட்டன. ஆத்திரம் இருவர் பக்கத்திலும் மோதியது, கோபம் மிகுதியில் காவல்வீரன் தனது துப்பாக்கியை எடுத்துச் சுட்டுவிட்டான்.

முதல் துப்பாக்கி வெடித்துவிட்டது. முதல் இரத்தம் சிந்தப்பட்டுவிட்டது.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும், சிதறிக் கிடந்த பெண்கள் ஆண்கள் அனைவரும் சத்தம் கேட்ட இடத்துக்குவந்தனர்.

“நம்மைப் பார்த்து காவற்படை சுட்டது.”

“இதோ! சுடப்பட்டவன்! இதோ, சிந்திய இரத்தம்!”

“ரொட்டி கேட்க வந்தோர் இரத்தத்தைச் சிந்துகிறார்கள்!”

கூட்டத்தினரிடை கோபம் அதிகமானது. ஒன்றுகூடி, காவல் வீரர்களை நெருங்க ஆரம்

பித்தனர். எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல மேலும் பல துப்பாக்கிகள் வெடித்தன. கூட்டத்தின் ஆவேசம் அதிகரித்தது.

காலையிலிருந்த சோர்வு வேடிக்கை எங்கோ மறைந்துவிட்டது. கோபத்தின் உருவங்கள் குமுறின, ஆவேசத்தின் அனல் அந்தக் கண்களில் தெரிந்தது. பசிவேறு தாக்க ஆரம்பித்தது. பட்டினிப் பட்டாளம் எதிர்த்தாக்குதல் ஆரம்பித்தது.

காவல் வீரர்கள், துப்பாக்கி எதுவும் தடை செய்யமுடியவில்லை. பலமான தாக்குதல். வலிய கரங்கள்! பட்டினிப் பார்வைகள்! தாய்மார்களின் கோபம்! எல்லாம் தாக்கியது!

வெளிக்கதவு பிளந்து விழுந்தது, வெள்ளம் பாய்வதுபோல கூட்டம் உள்ளே புகுந்தது.

உள்ளே புகுந்துவிட்டார்கள்; இனி அவர்களை எதுவும் நிறுத்தமுடியாது. சிறிது நேரத்துக்குள் வெளிப்பாதைகள், தோட்டம், முதல் மண்டபம், நடனசாலை......மக்கள் கூட்டம் வழிந்துகொண்டிருந்தது. பளிங்குப் படிக்கட்டுகளை சேற்றுக்கறைபடிந்த கால்கள் கடந்தன; பச்சைநிறக் கம்பளங்களில் இரத்தக் கறை விழுந்தது.

காவல்காரர்கள் துரத்தித்துரத்தி யடிக்கப்பட்டனர். அவர்களை விரட்டிக்கொண்டு கூட்டம் அறைகளுக்குள், மண்டபங்களுக்குள் நுழைந்து, நுழைந்து வந்தது.

பொன் விளக்குகள் அறுந்தன, கண்ணாடி சித்திரங்கள் நொறுங்கின, பளிங்கு மேடைகள் விழுந்தன, அலங்காரச் சாமான்கள் சிதறின.

"அரசியைக் காப்பாற்றுங்கள்!" ஒரு அறைக்குமுன் கூக்குரல் எழுந்தது. உள்ளே அரசி உறங்கிக்கொண்டிருந்தாள். அரசியினுடைய இடம் என்று தெரிந்ததும், மிகுந்த வெறுப்புடன் கூட்டம் கதவைத் தாக்க ஆரம்பித்தது. வெளியில் சத்தம் அதிகம் கேட்டதும் அரசி விழித்துக்கொண்டாள். கூச்சல், கதவின்மீது விழும் அடிகள்! பதறிப்போய், அவசரமாக ஒரு போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு, மற்றொரு கதவைத் திறந்து, மறைவான வழியாக அரசனுடைய அறைக்குப் போய்விட்டாள்.

அரண்மனை முழுவதும் பட்டினிப் பட்டாளம் சுற்றிவந்தது. ஆத்திரத்தால் பல சாமான்கள் வீசியெறியப்பட்டன. சிலர் இதுதான் சமயமென களவாடவும் கிளம்பினர். அரண்மனை அலங்கோலமானது. சுற்றிக் கொண்டுவந்த கூட்டம் கடைசியாக அரசன் தங்கியிருக்கும் மாளிகைக்கு அருகில் வந்தது.

உள்ளே அரசன் மிகக்கவலையுடன் தன் குழந்தைகளை அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான், "எங்களைக் காப்பாற்ற யாருமில்லையா?" என்று அழுதவண்ணம் அரசி இருந்தாள். வெளியில் கூட்டத்தின் ஆரவாரம் அதிகமானது.

கூட்டத்தை உள்ளே போகவிடாமல், காவல்காரர்கள் தடுத்துக்கொண்டிருந்தனர். பதினையிரத்துக்கு மேற்பட்ட மக்களை, ஒரு பத்துப் பதினைந்து வீரர்கள் எப்படி சமாளிக்க முடியும்? வீரர்கள் கீழே தள்ளப்படும் நிலை வந்தது. அப்பொழுது மாளிகையின் கதவு திறந்தது, மன்னன் வெளிவந்து, "அவர்களை ஒன்றும் செய்யாதீர்கள்!" என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்டுக்கொண்டான். அரசனை நேரில் பார்த்ததும், கூட்டத்தின் கொதிப்பு அடங்கியது. மன்னனை வாழ்த்தி ஆரவாரித்தார்கள்.

இதற்குள் அரண்மனைக்குள் மக்கள் புகுந்துவிட்ட செய்தி லாபெய்த்துக்கு எட்டியது. அவன் தனது படைவீரர்களை அழைத்துக்கொண்டு, அரசன் இருக்குமிடம் வந்ததும், கூட்டத்திலிருந்த சத்தமும், கூக்குரலும் அடங்கியிருந்தன. போர்வீரர்கள் மக்களை வெளியே தள்ளி, ஒழுங்குபடுத்தினார்கள். கூட்டத்தினர் தோட்டத்தில் போய் நின்றார்கள்.

ஓடி ஒளிந்த காவல் வீரர்கள் மெதுவாக வெளிவந்தார்கள். அவர்களுடைய தொப்பிகளில் புரட்சிச் சின்னமான மூவர்ணக்கொடிகள்—சிவப்பு, நீலம், வெள்ளை நிறங்கள் அடங்கிய புரட்சி சின்னங்கள் காட்சியளித்தன. முன்பு இருந்த கோபம் மறைந்து, மக்கள் அவர்களைக் கண்டு ஆரவாரித்தார்கள். அவர்களும் "வாழ்க தாயகம்! வாழ்க பிரான்ஸ்!" என்று ஒலித்தார்கள். ஒருவகையான சமாதானம்! அரண்மனையிலிருந்தவர்களின் பயம் நீங்கியது.

லாபெய்த் வழிகாட்ட, மன்னன் மாடி ஓரத்திற்கு வந்து நின்று, மக்களுக்குக் காட்சி அளித்தான். பின்பு அரசியும், குழந்தைகளும் அழைத்துவரப்பட்டனர். மக்களை எதிர்த்துச் சுட்ட காவற்படையின் தலைவனும் அங்கு வந்தான். அவன் தொப்பியின்மீது பெரிய மூவர்ணச் சின்னம் இருந்தது.

மக்கள் திருப்தியடைந்தனர், "வாழ்க மன்னன்!" "வாழ்க தாயகம்!" என்று ஆரவா

ரித்தார்கள், அத்துடன் "பாரிசுக்கு மன்னன்!" என்ற குரல்களும் ஒலித்தன. மன்னனைப் பாரிசுக்கு அழைத்துக்கொண்டு போய் விடவேண்டுமென்ற எண்ணம்—உறுதி எல்லோர் முகத்திலும் பிரதிபலித்தது. மன்னன் பாரிசுக்கு வந்துவிடவேண்டுமென்று கூட்டத்தினர் தீர்மானமாகக் கூவினார்கள்.

அரசனுடைய கோச் வண்டி தயாராக்கப்பட்டது. அரசனும், அரசியும், அவர்களுடைய மக்கள் இருவர்—மகனும், மகளும்—கோச் வண்டியில் ஏறினார்கள். ஊர்வலம் புறப்பட்டது பாரிஸ் நகர் நோக்கி.

முதலில் தேசியப்படையினர் அணிவகுத்துச் சென்றனர். பின்னால் துப்பாக்கிவீரர்கள், பீரங்கிப்படை. அவர்களையடுத்து பட்டினிப் பட்டாளத்தின் அணிவகுப்பு—கத்தி, கம்பு, இரும்புக் கரண்டிகள், கூச்சல் இவைகளுடன். அவர்களுக்குப் பின்னால் ஐம்பது வண்டிக் கோதுமைத் தானியம். வார்சேய்ல் தானியக் கிடங்கிலிருந்து எடுத்துவரப்படுவது இவைகளுக்குப் பின்னால் அரசனுடைய காவற்படைவீரர்கள், அவர்களுக்குப்பின் அரசனுடைய கோச்வண்டி. அரசனைப் பின் தொடர்ந்து மூனியரும் மக்கள் பிரதிநிதிகளும்.

பாரிஸ் நகருக்குள் ஊர்வலம் நுழைந்ததும், பெண்கள் கேலிப் பாடல்களைப் பாட ஆரம்பித்தனர். கோதுமை ஏற்றிவரும் வண்டிகளையும், அரசனுடைய வண்டியையும் சுட்டிக்காட்டி, "ரொட்டிக்காரன், ரொட்டிக்காரன் மனைவி, ரொட்டிக்காரனின் பிள்ளை எல்லோரையும் அழைத்துவந்திருக்கிறோம், பாருங்கள்!" என்று பெண்கள் பாடினார்கள்.

பாரிஸ் நகரில் துய்லரி என்ற இடத்தில் ஒரு அரண்மனை இருந்தது. 14-வது லூயி மன்னன், மிக ஆடம்பரமாக வாழ்ந்த காலத்தில் அங்கு வாழ்ந்திருக்கிறான். பாரிஸ் நகர மக்களால் ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட 16-வது லூயி அந்த அரண்மனைக்குச் சென்றான்.

மன்னன் கைதிபோல அழைத்துவரப்பட்டு, அந்த அரண்மனையென்னும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். இது வெளிப்படையாகக் கூறப்படவில்லை. மக்களைச் சமாதானப்படுத்தச் செய்வதாக மன்னன் முதலில் நினைத்தான். மன்னனை ஊர்வலமாக அழைத்து வந்தவர்களுக்குக்கூட தாங்கள் செய்வதின் முழு அர்த்தம் தெரியாமலிருக்கும். மன்னனை வரவேற்கும்பொழுது, பழைய புகழ்ச்சி முறையிலேயே பேச்சுகள் இருந்தன.

பாரிஸ் நகரிலிருந்த அரண்மனையில் நீண்ட காலமாக யாரும் வசிக்கவில்லை. சரியான கவனிப்பில்லாமல், அது இருண்டு கிடந்தது. இருண்ட அரண்மனை, அதில் அரசகுடும்பத்தினர் அழைத்துச்செல்லப்பட்டனர். அரச வாழ்வுக்கு இருண்டகாலம் ஆரம்பித்துவிட்டது.

அரண்மனைக்குள் நுழையும்பொழுது, மன்னனின் மகன்—சிறுவயதினன்—"பார்ப்பதற்கு நன்றாகயில்லையே!" என்று சொன்னான். அரசி அவனுடைய வாயை மூடி "அப்படிச் சொல்லக்கூடாது. பதினாலுவது லூயி மன்னர் இங்குதான் வாழ்ந்தார்" என்று சொன்னாள்.

துய்லரி அரண்மனைக்குள் அரசகுடும்பத்தினர் நுழைந்தனர், அதற்குப்பின் சுதந்தரமாக வெளியேறும் வாய்ப்பை இழந்தனர். அரசனும் அரசியும் அரண்மனையில் கைதிகள் போல் அடைந்துகிடந்தனர்.

(தொடரும்)



வெட்கத்தால் வெளியிடவில்லை

[எழினி]

பாண்டிய நாட்டில் கொற்கைத் துறை முகத்தை அடுத்த சிற்றூர். இயற்கை வளன்களெல்லாம் கொழிக்கும் இடம். எங்கு பார்க்கினும் சாலைகளும் சோலைகளும் கண்ணுக்கினிய காட்சிகளை வழங்குகின்றன!

அடர்ந்த சோலை! அதில்தான் அந்த ஆணழகனும் பெண்ணழகியும் நாள்தோறும் ஒருவரையொருவர் எதிர்ப்படுவது வழக்கம், தலைவனும் தலைவியும் தனியே கூடியிருந்து சிரித்துப் பேசி மகிழ்ந்திருக்கும்போதெல்லாம், யாரும் அந்தப் பக்கம் வந்துவிடாமல் காவல் புரிந்து கண்காணித்து வருகிறாள் தோழி.

உற்றார்க்கும், ஊரார்க்கும் தெரியாமல் நடந்துவரும் இந்தக் களவொழுக்கம் நீண்ட நாட்களாக நடைபெறுகிறது. காதலியைக் காண்பதும், அவளோடு கூடியிருந்து மகிழ்ந்து விட்டுச் செல்வதும் காதலனுக்குத் தனி இன்பம் தருகின்றன. இந்தக் களவொழுக்க இன்பத்தை நாள்தோறும் பெறவேண்டும் என்பதிலே ஆவலுற்றுக், களவொழுக்கத்தை எவ்வளவுக்கெவ்வளவு நீண்டநாட்கள் நீட்ட முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு மிக்க நாட்கள் நீட்டுவதிலே கவனம் செலுத்துகிறான் தலைவன்.

தாய் தந்தையர்க்கு அஞ்சித், தமையனுர்க்கு அஞ்சி, உறவினர்க்கு அஞ்சி, ஊரார்க்கு அஞ்சி மறைந்து மறைந்து சென்று காதலனைப் பார்த்துவிட்டுத் திரும்புவது என்பது தலைவிக்குத் தொல்லை தரும் ஒன்றாகவே இருந்து வருகிறது. தொல்லையை எப்படித் தவிர்க்கலாம் என்று சிந்திக்கிறாள். ஊரார் அறிய செய்யப்படும் திருமணத்தைச் செய்துகொண்டால், இருவரும் வெளிப்படையாகவே கூடி வாழலாமே என்று எண்ணுகிறாள். தன்னை விரைவில் திருமணம் செய்துகொள்ளும்படி தலைவனிடம் எப்படி நாணத்தைவிட்டுச் சொல்வது என்று தெரியாமல் விழிக்கிறாள்.

சோலைக்குப் புறத்தே நின்று, யாரேனும் வந்துவிடுவார்களோ என்ற அச்சவுணர்வுடன் வழிகளின்மேல் விழிகளை வைத்துக்கொண்டிருந்து, எவ்வளவு நாட்களுக்குத்தான் காவற்றொழில் புரிவது என்று தோழி மனதிற்குள் சலித்துக்கொள்கிறாள். தலைவனுக்கும் தலைவிக்கும் திருமணம் நடந்தேறிவிட்டால் தனக்குத் தூது செல்லும் வேலையும், காவல் காக்கும் வேலையும் குறையுமே என்று அவள் கருதுகிறாள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு, விரைவில் திருமணம் நடைபெறுவதற்கான வழி ஏதும் ஏற்படாதுபோலிருக்கிறதே என்பதை அறிந்துகொண்ட தோழி ஒருநாள் தலைவியைப் பார்த்து, “ஏடி! எவ்வளவு நாட்களுக்குத்தான் எனக்கு இந்தக் காவல்காக்கும் தொழிலைக் கொடுத்துக்கொண்டிருக்கப்போகிறாய்? எப்பொழுதுதான் உனக்குத் திருமணம் நடைபெறுமோ? நானும் எப்பொழுதுதான் ‘அக்கடா’ என்று உட்காரப்போகிறேனோ? தெரியவில்லை!” என்று சலிப்புடன் கூறுகிறாள்.

அதற்குத் தலைவி, “திருமணம் விரைவாக நடைபெறவேண்டும் என்று நானுந்தான் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறேன்! திருமணம் நடைபெறாமலிருப்பது எனக்குந்தான் தொல்லையாக இருக்கிறது! நான் எல்லோர்க்கும் எவ்வளவு அஞ்சி அஞ்சி நடக்கவேண்டியிருக்கிறது தெரியுமா?” என்று வருத்தத்துடன் கூறுகிறாள்.

“பின் ஏன் திருமணம் செய்துகொள்வதற்குக் காலந்தாழ்த்துகிறாய்?”

" நானா காலந் தாழ்த்துகிறேன் ?"

" பின் யார் தாழ்த்துகிறார்கள் ?"

" காதலர்தான் காலந்தாழ்த்துகிறார் !"

" திருமணம் செய்துகொள்ளும்படி நீ வற்புறுத்தவில்லையா ?"

" நானா ?"

" நீயல்லாமல் வேறு யார் வற்புறுத்துவார்கள்? திருமணம் செய்துகொள்ளப்போகிற நீதான் வற்புறுத்தவேண்டும் !"

" நான் எப்படியடி வற்புறுத்துவேன்? திருமணம் பற்றிப் பேசலாம் என்று எண்ணினால், உடனே வெட்கம் தொண்டையை அடைக்கிறது! நான் என்னடி செய்வேன் !"

" உன்னால் முடியாவிட்டால், சொல்லு, நான் வற்புறுத்திக் கேட்கிறேன் !

" எப்படியாவது நியாவது அவருக்குச் சொல்லடி !"

தோழிக்கும் தலைவிக்கும் இடையே இப்படி உரையாடல் நடந்த பிறகு, அடுத்துத் தலைவனைக் காணும்போது, அவனிடம் திருமணம் பற்றி வற்புறுத்தவேண்டும் என்று தோழி எண்ணிக்கொண்டிருக்கிறாள்.

மறுநாள், தலைவியை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டுத் தோழிமட்டும் சோலைப்பக்கம் நோக்கிச் செல்கிறாள். தலைவன் வழக்கம்போல் தலைவியைக் காண குறிப்பிட்ட நேரத்தில் சோலைக்கு வந்து சேருகிறான். அங்குத் தலைவியைக் காணாமல், தோழிமட்டும் நின்றிடக் கண்டு திகைப்படைகிறான். சுற்றுமுற்றிலும் பார்க்கிறான். தலைவி கண்ணுக்குப்படவில்லை. தோழியின் அருகில் வந்து, " என் அருமைக் காதலி எங்கே ?" என்று வினவுகிறான்.

தோழி : " அவள் வரவில்லை !"

தலைவன் : " ஏன் ? அவள் உடலுக்கு ஏதேனும்......!"

தோழி : " அப்படி ஒன்றும் புதிதாக ஏற்படவில்லை !"

தலைவன் : " நேற்றுகூட நன்றாகத்தானே இருந்தாள் !"

தோழி : " உன் கண்பார்வைக்குத் தோற்ற அளவில் நன்றாகத்தான் இருந்திருப்பாள் ! அவள் உள்ளம் படும் வேதனையை நீ எப்படி அறிந்திருக்கப்போகிறாய் ?"

தலைவன் : " நேற்று என்னைவிட்டுப் பிரியும் போது மிக்க அன்போடுதான் பிரிந்து சென்றாள் ! என்மீது அவளுக்கு வருத்தம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லையே !"

தோழி : "வெளிக்குக் காட்டிக்கொண்டால் அல்லவா, அவளது வருத்தம் உனக்குத் தெரியப்போகிறது !"

தலைவன் : " ஏன் அவள் வருத்தப்படவேண்டும் ?"

தோழி : " நீ திருமணம் செய்துகொள்ளவில்லையே என்றுதான், அவள் வருந்துகிறாள் !"

தலைவன் : " நான் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று கூறவில்லையே !"

தோழி : " நீ அப்படிக் கூறவில்லை என்றாலும், காலந்தாழ்த்திக்கொண்டு வருகிறாயே !"

தலைவன் : " நான் காலந்தாழ்த்துவதுபற்றி அவள் ஒன்றும் என்னிடம் கூறவில்லையே ! களவொழுக்கம் நீடிப்பது எனக்கு எப்படி இன்பம் தருவதாக இருக்கிறதோ அப்படித்தான் அவளுக்கும் இன்பந்தருவதாக இருக்கிறது என்றல்லவா எண்ணிக்கொண்டிருக்கிறேன் ! காலந்தாழ்த்துவதில் அவளுக்குத் தொல்லை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே !

தோழி : " அவள் தன்னை விரைவாகத் திருமணம் செய்துகொள்ளும்படி, உன்னிடம் எப்படி வாய்விட்டுச் சொல்லுவாள்? அவள் ஒரு பெண் அல்லவா ? வெட்கம் அவளைத் தடுக்குமே ! இது நீயாக உணர்ந்துகொள்ளவேண்டிய ஒன்றே தவிர, கேட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லையே ! அவள் உன்னிடம் கூறாமலிருக்கிறாள் என்பதற்காக அவளுக்குத் தொல்லை ஏதும் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டாயா ?"

தலைவன் : " அவளுக்கு என்ன தொல்லை ?"

தோழி : " என்ன தொல்லையா ? பருவமங்கையான அவள் வெளியே செல்லுதல் தகாது என்று கருதி அவளது தாய் காவற் கட்டுப்பாடுகளை மிகுதியும் ஏற்படுத்தியிருக்கிறாள். அந்தக் கட்டுக்காவல்களையெல்லாம் நாள்தோறும் மீறிவருவதென்றால் அவ்வளவு எளிதல்லவே! அதுமட்டுமல்லாமல் ஊரார் என்ன என்ன பழி தூற்றுகிறார்களோ என்று

அஞ்சவேண்டியிருக்கிறது. எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு ஆளாகிக்கொண்டிருப்பது?''

தலைவன் : "இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாள்?''

தோழி : "அவள் நலமெல்லாம் குலையும்படியாக உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கிறாள்? நீதான் அவளது அழகிய கண்களைப் பார்த்திருப்பாயே! கொற்கைப் பட்டினத்தின் தெளிந்த நீர்த்துறையில், சிறிய பசுமையான இலைகளோடு கூடிய நெய்தல் மலர் எப்படிப்பட்ட அழகோடு காட்சியளிக்கின்றதோ, அப்படிப்பட்ட அழகுபயக்கும் அவளது கண்கள், இப்பொழுது அழகு குலைந்து காணப்படுகின்றன!''

தலைவன் : "நேற்றுப் பார்க்கும்போது, அவளது உடலில் வேறுபாடு ஒன்றையும் காணமுடியவில்லையே!''

தோழி : "தலைவி, தன்னிடத்தில் காணப்படும் வேறுபாடுகளையெல்லாம், உற்றாரும் ஊராரும் கண்டுகொள்ளமுடியாதபடி, எப்படியெல்லாம் மறைத்துக்கொள்ள முடியுமோ அப்படியெல்லாம் மறைத்துக் கொள்கிறாள்! நீயோ மற்றவர்களோ எப்படி அவ்வளவு எளிதாக அந்த வேறுகளைக் கண்டுகொள்ளமுடியும்? தலைமயிர் சரிந்து விழும்போதெல்லாம், காற்றடிப்பதால் அவிழ்ந்து விழுவதாகக் கருதும்படி அதனை வாரி முடித்துக்கொள்கிறாள்! கழலும் வளையல்களைக் கழலாதவாறு இறுக்கிக் கைகளின் வாட்டந் தோன்றாதபடி மறைத்துக் காட்டுகிறாள்! உடம்பில் ஏற்படும் களைப்பு காதல் நோயால் ஏற்படுகிறது என்பதைக் காட்டிக்கொள்ளாமல், மற்ற பெண்கள் கூட்டத்தோடு சேர்ந்து விளையாடுவதால் ஏற்படுகிறது என்று காண்போர் கருதும்படி நடந்துகொள்கிறாள்! இவையெல்லாவற்றையும் மற்றவர்களுக்காகச் செய்கிறாள்; எனவே மற்றவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. அவளின் உண்மையான நிலையை உன்னால் கூடவா அறிந்துகொள்ள முடியவில்லை!''

தலைவன் : "களவொழுக்கத்தில் பெறும் காதலின்பத்தால் இவற்றையெல்லாம் காண நான் மறந்துவிட்டேன்!''

தோழி : "எல்லாவற்றையும் அவள் மறைத்துப் பார்த்தாள்; ஆனால் அழுகையை மட்டும் அவளால் மறைக்க முடியவில்லை. அவளுடைய கண்கள் இப்பொழுது ஓயாமல் அழுதுகொண்டிருக்கின்றன. கட்டுப்பாடு மிகுதியும், உன்னைக் காண முடியவில்லையே என்ற வருத்தமும் அவளை அழச் செய்கின்றன. அவள் காதல் நோயால் வருந்திக்கொண்டிருக்கிறாள் என்பதை அவளது கண்கள் இப்பொழுது காட்டிக்கொண்டேயிருக்கின்றன! நான் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிவிட்டேன்; இனி நீ செய்ய வேண்டியதைச் செய்!''

இவ்வாறாகத் தலைவியின் நிலையைத் தோழி விளக்கிக் கூறியதும், மனம் உருகிய தலைவன் "விரைவில் வந்து மணம் முடிப்பேன்; அதற்கான முயற்சியில் இப்பொழுதே ஈடுபடுகிறேன். இச்செய்தியைத் தலைவியிடத்தில் போய்ச் சொல்'' என்று கூறுகிறான்.

தோழி மிக்க மகிழ்ச்சியோடு, புன்முறுவல் பூத்த முகத்துடன், ஓடோடிப்போய்த் தலைவியிடத்தில் செய்தியை அறிவிக்கிறாள். இனிய செய்தியைக் கேள்வியுற்ற தலைவியும் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறாள்!

ஃ ஃ ஃ

நற்றிணை 23-ம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு இக்காதலோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. செய்யுளை இயற்றியவர் **கணக்காயனார்** என்ற புலவர் பெருந்தகையார் ஆவார். இவரது பெயர் குறுந்தொகையில் கணக்காயன் தத்தன் என்று கூறப்படுவதாலும், மதுரை கணக்காயன் என்று வேறு இடங்களில் கூறப்படுவதாலும் இவரது இயற்பெயர் தத்தன் என்பதும், ஊர் மதுரை என்பதும் பெறப்படுகின்றன. இவர்தான் நக்கீரரின் தந்தையாவார் என்று கூறுவர். இவர் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லிக்கொடுக்கும் ஆசிரியராக விளங்கியதால், இவரைக் கணக்காயர் என்று வழங்கினர். இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. தலைவியின் ஆற்றாமையை உணர்ந்த தோழி தலைவனைத் திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துவதால் இது குறிஞ்சி ஒழுக்கத்தின்பாற்பட்ட செய்யுளாகும்.

தொடிபழி மறைத்தலில் தோ(ள்)உங் தனவே
வடிக்கொள் கூழை ஆயமோ(டு) ஆடலின்

இடிப்பு மெய்யதோன்(று) உடைத்தே கடிக்கொள
அன்னை காக்கும் தொல்நலம் சிதையக்
காண்தொறும் கலுழ்தல் அன்றியும் ஈண்டுநீர்
முத்துப்படு பரப்பில் கொற்கை முன்துறைச்
சிறுபா( ) அடைய செப்பூர் நெய்தல்
தெள்நீர் மலரில் தொலைந்த
கண்ணே காமம் கரப்(பு) ஆரிய அவ்வே.

[நற்றிணை—23.]

[பொழிப்புரை : வாரிமுடித்த கூந்தலையுடைய இவள், தன்னைப் பிறர் கூறும் பழிச் சொற்களுக்கு அஞ்சி, வளைகளைக் கழலாதவாறு செறித்து மறைத்தலாலே தோள்கள் வாட்டந் தோன்றுவாயின ; அல்லாமலும் தன் ஆயத்தாரோடு விளையாடுதலால், உடம்பில் களைப்பும் அவ் விளையாட்டினால் உண்டாகியது என்று நினைப்பதற்குரியதாய் இருந்தது ; காவல்மிகுதியாக, அன்னையானவள் பாதுகாக்கும் இவளது பழைய நலமெல்லாம் சிதையும்படி காணுந்தோறும் அழுத லல்லாமலும், நெருங்கிய நீர்மிக்க முத்துக்கள் விளைகின்ற கடற் பரப்பினையுடைய கொற்கை நகரத்து முன்புள்ள துறையிலிருக்கும் சிறிய பசிய இலைகளையுடைய அழகமைந்த நெய்தலின் தெளிந்த நீரிலுள்ள மலர்போலக் கண்களே அழகு குலைந்தன; அவை காதலை மறைக்கமுடியாதன வாய் இருக்கின்றன ; ஆதலாலே உனக்கு ஏற்றதொன்று செய்வாயாக !

தொடி - வளையல் ; உய்ந்தன - வாழ்ந்தன ; கூழை - தலைமயிர் ; ஆயம் - கூட்டம் ; இடிப்பு - களைப்பு ; கடி - காவல் ; தொல் - பழைமையான ; கலுழ்தல் - அழுதல் ; ஈண்டு - நெருங்கிய ; பாசு - பாசி ; கரப்பு - மறைப்பு.]

ஃ ஃ ஃ

காதலன் விரைவாக மணந்துகொள்ளாத நிலையில், களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் காதலி எவ்வளவு வேதனைப்படுவாள் என்ப தையும், எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளா வாள் என்பதையும் இச்செய்யுள் அழகுற எடுத்துக்காட்டுகின்றது.

பெண் தக்க பருவம் எய்தும்போது, தாய் அவளுக்கு மிகுதியான காவல் போட்டு வீட் டிற்குள்ளேயே இருக்கும்படி செய்வாள் என் பதும், இளம் பெண்கள் மற்ற பெண்களோடு கூட்டமாக இருந்து விளையாடிப் பொழுது போக்குவார்கள் என்பதும் பெறப்படுகின்றன.

கொற்கைத் துறைமுகத்தை அடுத்த கடற் பரப்பில், நீரோட்டமுள்ள நல்ல முத்துக்கள் கிடைத்தன என்ற செய்தி இச்செய்யுளின் மூலம் அறியக்கிடக்கின்றது.

கொற்கையில் முத்து கிடைக்கும் செய்தி யைத் தோழி தலைவனுக்கு நினைவுபடுத்துவ தன்மூலம் ஒரு கருத்தைத் தலைவனுக்கு உணர்த்த முற்படுகிறாள். அதாவது தலைவன் திருமணம் செய்துகொள்ள முயல் வானேயானால், அந்தச் செய்தி தலைவியின் வீட்டார்க்கு மிக்க மகிழ்ச்சியளிக்கும் என்ப தாகும். கொற்கை நீரில் முத்து விளையும் என்பது உள்ளுறை உவமமாகும்.



இரா.செழியன்

(28)

பிரகஸ்பதியின்—ஐந்து பதிவிரதைகளில் ஒருத்தியான தாரையை வருணன் அழைத்துக்கொண்டுபோய் ஒளித்ததால், கடல் நீர் வற்றியது. அதைப்போலவே மற்றுமொரு முறை கடல்நீர் வற்றியது, மற்றொரு முனிவருடைய பத்தினியை வருணதேவன் களவாடிச் சென்ற காரணத்துக்காக.

சந்திரனுக்கு பத்திரை யென்ற மகள் இருந்தாள். சந்திரன் அழகில் மிக்கவன். அவனுடைய மகள், இன்னும் அதிக அழகுடையவளாக வளர்ந்துவந்தாள். அவள் நல்ல பருவமடைந்ததும், தேவர்கள் பலர் அவள் மீது கண்வீச ஆரம்பித்தனர். பெண்ணென்றால் மயங்காத தேவன் இருக்கமுடியாதல்லவா? ஆதலால் பத்திரையை அடைவதில் போட்டி பலமாக இருந்தது. போட்டியிட்டவர்களில் வருணனும் ஒருவன்.

போட்டியிட்டவர்களில் யாரையும் சந்திரன் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தத் தேவர்களில் எவரும் நல்ல கணவனாக இருப்பார்கள் என்ற நம்பிக்கைச் சந்திரனுக்கு ஏற்படவில்லை. ஏனென்றால் சந்திரனே அந்தத் தேவர்களில் ஒருவன். ஆதலால் தேவர்களுடைய போக்கும் ஒழுங்கும் அவனுக்கு நன்றாகத் தெரியும். பத்திரைக்கு நல்ல கணவன் யாரென்று தேடி அலைந்து, கடைசியில் கங்கைக்கரையில் ஒரு காட்டில் தவம்செய்த முனிவரொருவரை அவன் கண்டுபிடித்தான். அவர் பெயர் உசத்தியர். அவர் மிக நல்லவராம், தீதான எண்ணமோ, சூதான பார்வையோ அவரிடம் காணமுடியாது. அவருடைய நல்லொழுக்கத்தைப்பற்றி எல்லோரும் ஒருமுகமாகக் கூறினார்கள். பத்திரைக்கு ஏற்ற பதி இவர்தான் என்று சந்திரன் தேர்ந்தெடுத்து, திருமணத்தை நிச்சயித்தான்.

பரட்டைத் தலையுடன், தாடியும் மீசையும் நிறைந்து, காட்டுக்கோலத்துடன் மணமகன் வீற்றிருந்தான். பசும்பொன் மேனியள், பார்வைக்கினிய நங்கை பத்திரை அழைத்துவரப் பட்டாள். தந்தை சந்திரன் அவளை முனிபுங்கவர்முன் நிறுத்தி, தாரை வார்த்துக்கொடுத்தான். கமண்டலத்திலிருந்த தண்ணீர் வழிந்தது, பத்திரை உசத்தியரின் பத்தினியானாள். அப்பொழுது அங்கு கூடியிருந்த தேவர்கள் பலரின் கண்களில் நீர்வழிந்தது, வருணதேவன் உள்ளம் கொப்பளித்தது. இந்த அழகு மங்கை அந்த அகோரமூர்த்திக்கா என்று தேவர்கள் பத்திரைக்காகப் பரிதாபப்பட்டனர்; உசத்தியரிடம் கோபப்பட்டனர். ஆனால் கன்னிகாதானம் நிறைவேறியது. பத்திரையை அழைத்துக்கொண்டு உசத்தியர் கிளம்பினார், தனது காட்டுக்கு; தேவர்கள் திரும்பினார்கள் தங்கள் மாளிகைகளுக்கு; ஏற்பட்ட சஞ்சலத்தை மதுக்கோப்பைகளில் அமிழ்த்திவிட வருணன் புறப்பட்டான் தன் கடலுக்கு, எப்படியாவது பத்திரையை அடைந்துவிடுவதென்ற உறுதியுடன்.

பத்திரையின் காட்டுவாழ்க்கை ஆரம்பமானது. அவளுக்குக் கிடைத்த பதி உண்மையிலேயே மிக நல்லவராக இருந்தார். காலையில் எழுந்து, ஜபதபங்கள் செய்து ஆரம்பித்தால், மாலையில் சந்தியாவந்தனம் செய்வது வரை, முனிவர் எதையும் விடாமல் ஒழுங்காகச் செய்துகொண்டிருந்தார், தவம் செய்யும் முறைகளில் தவறு ஏதும் நிகழாமல் அவர் பாதுகாத்துவந்தார். அவருக்கு வேண்டிய பணிவிடைகளைப் பத்திரை செய்துகொண்டிருந்தாள், அந்த அளவில் காட்டில் அவர்களுடைய 'கிருக' வாழ்க்கை நடந்துகொண்டிருந்தது. பத்திரைக்குப் பதில், பணிவிடை செய்ய ஒரு சீடன் கிடைத்திருந்தால் ஆசிரமம்

எப்படியிருக்குமோ அந்த அளவில்தான் பத்திரையிருந்த ஆசிரமமும் இருந்தது. உசத்தியர் தியானத்திலும், வேள்வியிலும் காலத்தைக் கடத்தினர். பத்திரை மலர் பறித்துவருவாள்—தான் சூடி மகிழவல்ல, கணவனுடைய பூஜைக்காக. காட்டிலே திரிந்துவந்தாள் — உல்லாசத்திற்காகவல்ல, உசத்தியர் நடத்தும் வேள்விக்கு வேண்டிய விறகுகளைச் சேகரிக்க.

உசத்தியர் ஒழுங்கானவர்தான், ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்ள அவருக்கு நேரமும் கிடைத்திருக்காது. நல்ல தவம் செய்தவர், வேதங்களை ஐயந்திரிபற உணர்ந்தவர். அப்படிப்பட்ட மகானுக்கு, பத்திரை மட்டும் மனைவியாயிருக்கவேண்டியதில்லை, உசத்தியருக்கு நல்ல மனைவி கிடைத்தாள் பத்திரைக்கு நல்ல கணவன் கிடைக்கவில்லை.

வருணதேவன் பத்திரையை மறந்துவிடவில்லை. ஆற்றோரத்திலும், குளக்கரையிலும் பத்திரை வரும்பொழுது, வருணன் நீரில் மறைந்து இருந்தபடி பார்ப்பான். வந்தவள் நெடுநேரம் இருப்பதில்லை. ஆசிரமத்தில் வேலையதிகமானபடியால் போய்விடுவாள். மறுநாள்வரை வருணன் காத்திருப்பான்.

ஒருநாள் ஆற்றோரம் வந்த பத்திரை, நீரில் நெடுநேரம், நீராடினள். ஆற்றில் வேகம் அதிகமிருக்கும்பொழுது அவள் நீரில் இறங்குவதில்லை. அன்று ஆற்றின் ஓட்டம் தடைப்பட்டிருந்தது. நீராட பத்திரை நீரில் இறங்கினள்.

தண்ணீரில் மறைந்துவந்த வருணன், பத்திரையைத் தழுவிக்கொண்டான். பத்திரைக்குப் புரியவில்லை. ஆனல் நீராடுவது இன்பமாக இருந்தது. அதில் மயங்கியபடி இருந்தாள். வருணன் பத்திரையை பற்றி யிழுத்துக்கொண்டு, ஆற்றிலே அமிழ்ந்து, கடலுக்குச் சென்று, கடலுக்கடியில் இருக்கும் தன் மாளிகைக்குச் சென்றான். பத்திரை விழித்துப் பார்க்கும்பொழுது, நல்ல மாளிகை, அலங்கரிக்கப்பட்ட அறை, மலர் தூவப்பட்ட மஞ்சம், அருகில் வருணன். சுற்றிலும்—மாளிகையைச்சுற்றிக்கடலசைந்துகொண்டிருந்தது! பத்திரை கோபித்ததாகத் தெரியவில்லை. அந்த கடல் மாளிகையில் தங்கிவிட்டாள், வருணதேவனின் விருந்தினளாக—வருணதேவனுக்கு விருந்து தருபவளாக.

உசத்தியர் ஆசிரமத்தில் காத்துக்கொண்டிருந்தார், மலர் பறித்துவரப்போன பத்திரையைக் காணுமேயென்று, செய்துகொண்டிருந்த ஜபத்தைப் பாதியில் முடிக்க அவருக்கு மனமில்லை. ஆகவே அதை நிதானமாக முடித்துக்கொண்டு, ஆசிரமத்தை விட்டு வெளிவந்து பத்திரையைக் கூப்பிட்டார். கூப்பிட்ட குரலுக்குத் தயாராக இருக்கும் பத்திரையை இன்று காணும், வழக்கமாக மலர் எடுக்கும் இடத்தில், விறகு பொறுக்கும் இடங்களில் அவளைக் காணும். மிகக் கவலையுடன், உசத்தியர் காடுமுழுவதும் தேடிவந்தார். பத்திரையைக் கண்டுபிடிக்கமுடியவில்லை.

காட்டில் ஏற்பட்ட சலிப்பால், தந்தை உலகுக்குத் திரும்பிவிட்டாளோ என்று உசத்தியர் சந்திரமண்டலம் போனர். சந்திரன் தனது மாப்பிள்ளையை எதிர்கொண்டழைத்து "எங்கே பத்திரை? ஏன் அவளை அழைத்து வரவில்லை?" என்று கேட்டார்,

"அப்படியானல் பத்திரை இங்கு இல்லையா?"

"ஏன்? பத்திரை அங்கு இல்லையா?"

பத்திரை மாயமாக மறைந்துவிட்ட செய்தியை உசத்தியர் சந்திரனிடம் தெரிவித்தார். "ஒரு வேளை சந்திரமண்டலம் வந்திருப்பாளோ என்று நினைத்து வந்தேன்! இங்கும் காணுமே!" உசத்தியர் கலங்கினர்.

"எங்கு போயிருப்பாள்?" சந்திரன் யோசித்தான். அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. "உங்கள் ஆசிரமத்தில் யாராவது சீடன் இருந்தான?" என்று சந்திரன் உசத்தியரைக் கேட்டான். ஆசிரமத்தில் சீடர்களை வைத்துக் கொள்வதால் குருபத்தினிகளுக்கு ஏற்படும் ஆபத்து சந்திரனுக்கு நன்றாகத் தெரியும். அதனல்தான் ஆசிரமத்தைப் பற்றி அவன் கேட்டான்.

"சீடர்கள் யாரும் கிடையாது! பத்திரை ஒருத்திதான் இருந்தாள்!"

சந்திரன் தனது மண்டலத்திலும், மற்ற மண்டலங்களிலும் தேடச்செய்தான். பூமியின் மீது இரவு நேரங்களில் வரும்பொழுது தன் கண்ணுக்கெட்டியதூரம் அவனும் தேடிப் பார்த்தான். பலர், அழகிகள் கணவனைவிட்டுப் பிரிந்தவர்கள், கள்ளக் காதலர்களுடன் குலவுபவர்கள்—இரவு நேரங்களில் சந்திரன் பார்வையில் பட்டனர். பத்திரையை அவனல் கண்டுபிடிக்க முடியவில்லை.

பத்திரை இருக்குமிடத்தைக் கடைசியாக நாரதர்தான் கண்டுபிடித்தார். திரிலோக சஞ்

...ரியல்லவர், அவர்! அதிலும் வம்புபேசி காலத்தைக் கடத்தவேண்டுமென்று உலவி வருபவர்! ஆகையால், சந்திரனும் தேவர்களும் முனிவர்களும் கூடி கண்டுபிடிக்கமுடியாத ஒன்றை தம்பூரு நாரதர் கண்டுபிடித்தார்.

"நாராயணு!" "நாராயணு!" என்று நாராயண நாமத்தைப் பாடிக்கொண்டு நாரதர் வந்தார். அப்பொழுது உசத்தியர் மிகக் கவலையுடன் உட்கார்ந்திருந்தார்.

"உசத்தியரே! உத்தம முனிவரே! தவக் கோலத்தில் இருக்கவேண்டிய நீர் ஏன் இப்படிக் கவலைக்கோலத்தில் உட்கார்ந்திருக்கிறீர்?" நாரதர் கேட்டார்.

"பத்திரையைக் காணும்!" என்று முனிபுங்கவர் புலம்பினுர்.

"யார்? சந்திரன் மகள் பத்திரையா?"

"ஆமாம்!"

"சந்திரன் மகள் காணுமல் போய்விட்டாளென்ருல் நீர் ஏன் கவலைப்படவேண்டும். சந்திரனல்லவா தன் மகளைத் தேடியலைந்து கொண்டிருக்கவேண்டும். அதிக அழகுள்ள பெண்களைக் காப்பது மிகக் கடினமான காரியமென்று பெரியோர்கள் சொல்லவில்லையா?"

"நாரத முனிவரே! விளையாடாதீர்கள், நான் மிகவும் வேதனையுடன் இருக்கிறேன். பத்தரை எனது மனைவியாயிற்றே!"

"அபசாரம், உசத்தியரே! பத்திரை உமது மனைவியா? வருணனுடைய மனைவி யென்றல்லவா நான் நினைத்துக்கொண்டிருந்தேன்,"

"பத்திரையைக் காணுமே என்று தேடிக்கொண்டிருக்கிறேன். பத்திரை எனது மனைவியா அல்லவா என்ற கேள்வியை நீர் கிளப்பிவிடுகிறீர்? தேவர், மூவர் முன்னிலையில் சந்திரன் பத்திரையை எனக்குக் கன்னிகாதானமாகக் கொடுத்ததை நீர் அறியீரோ?"

"அறியேன், அருந்தவமுனிவரே! நான் நினைத்ததற்குக் காரணம், வருணனுடைய மாளிகையில் பத்திரையைப் பார்த்தேன்! அதலால் வருணனுடைய மனைவி என்று அவளை நினைத்தேன்."

"வருணனுடைய மாளிகையிலா?"

"ஆமாம்!"

"அவளுக்கு ஒரு கெடுதியும் சம்பவிக்கவில்லையே!"

"ஒன்றும் இல்லை! மிக நன்ருக இருக்கிருள், சகல வசதிகளுடன்!"

"வருணன் சிறையெடுத்துச் சென்று, அடைத்துப்போட்டிருக்கிருன்! இருக்கட்டும், உம்மைப் பார்த்ததும், பத்திரை ஏதாவது செய்தியனுப்பினுளா?" உசத்திய முனிவர் மிகப் பதைப்புடன் கேட்டார்.

"நான் அவளிருப்பதைத் தூரநின்று பார்த்தேனே யொழிய அருகில் செல்லமுடியாது, திரும்பிவிட்டேன்."

"கடுமையான காவலோ?"

"வருணனே காவல் இருக்கிருன்! எப்படி யென்று சொல்லுகிறேன் பாரும்! நான் எதேச்சையாகப் பாடிக்கொண்டு, கடலுக்கடியில் இருக்கும் சமுத்திரராசனுடைய நந்தவனத்தில் உலவப்போனேன். அப்பொழுது ஒரு ஊஞ்சலில் பத்திரையும், வருணனும் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருந்தனர். ஏதோ கணவன் மனைவி சாகசமாக இருக்கிருர்கள் என்று நினைத்து, நான் விலகிப்போய்விட்டேன்."

உசத்தியர் மிகப் பதைப்புடன் எழுந்தார். "அது சந்திரன் மகள் பத்திரையென்பது நன்ருகத் தெரியுமா?"

"நிச்சயமாக அவள்தான்! சிறு குழந்தையிலிருந்தே பத்திரையை எனக்குத் தெரியும். நான் சந்திரமண்டலம் போகும்பொழுது, அவள் எனது தம்பூரை மீட்டிப்பார்த்து மகிழ்வாள். நான் வருணனுடைய நந்தவனத்தில், ஊஞ்சலில், பார்த்தது சந்திரன் மகள் பத்திரை என்பது நிச்சயமாகத் தெரியும். ஆனல் அப்பொழுது, அவள் உம்முடைய மனைவி யென்பது தெரியாமற்போயிற்று."

"பத்திரையா?" என்று உசத்தியர் ஆத்திரப்பட்டார்.

"டிங்! டிங்!" என்று நாரதர் தம்பூரு ஒலித்தது.

"வருணனுடனு?"

"டிங்! டிங்!"

"நாரதரே! நீர் எனக்குத் தூதாகப் போய் வாரும்!" உசத்தியர் கேட்டுக்கொண்டார்.

"யாரிடம்! உமது பத்தினி பத்திரையிடமா?"

"இல்லை, வருணனிடம்!"

" என்ன சொல்லவேண்டும் ?"

" எனது மனைவி பத்திரையை அவன் அநியாயமாக அபகரித்துக்கொண்டு போயிருக்கிறான். மரியாதையாகத் திருப்பிக்கொண்டு வந்துவிட்டுவிடச் சொல்லும்! இல்லையேல் என்னுடைய சாபத்துக்கு ஆளாகநேரிடும்." உசத்தியர் மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

" சரி, போய் சொல்லிவருகிறேன்! டிங், டிங்!" என்று தம்பூரை மீட்டிக்கொண்டு நாரதர் கிளம்பினார்,

உசத்தியர் மிக ஆவலுடன் காத்திருந்தார். "வருணன், மகா அயோக்கியன், காமுகன் !" என்றெல்லாம் தனக்குள் திட்டிக்கொண்டிருந்தார். பத்திரையைப்பற்றி அவர் அதிகம் நினைக்கவில்லை, வருணன் அவளை எப்படி எப்படியோ மயக்கி வைத்திருக்கிறான். திரும்பத் தன்னிடம் வந்ததும், அவள் மனதைத் திருத்திக்கொள்ளலாம் அந்த வேதவிற்பனர் நினைத்துக்கொண்டார்.

கடைசியாக நாரதரின் கானம் கேட்டார். உசத்தியர் மிக ஆவலுடன் " பத்திரை! பத்திரை!" என்று எதிர்கொண்டழைக்கப் போனார். பத்திரையைக் காணோம். நாரதமுனிவர் மட்டும் தனியாக வந்தார்.

" ஏன். நாரதமுனியே! எங்கே எனது பத்திரை ?"

" அவளை அனுப்ப, வருணன் மறுத்துவிட்டான் !" நாரதமுனிவர் மிக அமைதியாகச் சொன்னார்.

" என்ன ?" முனிவர் கோபத்துடன் உறுத்துப்பார்த்தார்.

" முனிசிரேஷ்டரே! நீங்கள் சொல்லியவற்றை ஒன்றுவிடாமல் வருணனிடம் சொன்னேன். ' அப்பா, வருணா! அவர் பெரியர்! முனிவர்! அவருடைய மனம் வேதனையடையச்செய்யாதே! பத்திரையைத் திரும்ப அனுப்பிவிடு!' என்று இதமாச் சொல்லிப் பார்த்தேன். வருணன் ஒப்புக்கொள்ளவில்லை. பின்பு பயமுறுத்தியும் பார்த்தேன். 'உசத்தியமுனிவரின் கோபத்துக்கு ஆளாகாதே! அவருடைய தவம் மிகப்பெரிது, சாபம் மிகப் பொல்லாதது. ஆதலால் பேசாமல் பத்திரையைத் திரும்ப அனுப்பி அவருடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள் ! என்று கோபத்துடன் சொன்னேன். இந்திரன் கெட்டதும், சந்திரன் கெட்டதும் அவனுக்குச் சொன்னேன், ஆனால் காமப் பித்தத்துடன் இருக்கிறான். எது சொன்னாலும், அவனுக்குத் தெரியவில்லை. பத்திரையை அனுப்பமுடியாது. என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான்." நாரதர் தான் போய்வந்த தூதைப்பற்றிச் சொன்னார்.

" பத்திரை என்ன சொன்னாள் ?" என்று உசத்தியர் கேட்டார்.

" நான் போனபொழுது, அவர்கள் இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். என்னைப் பார்த்ததும், பத்திரை எழுந்து உள்ளே போய்விட்டாள். பரபுருஷாள்முன் பெண்கள் இருக்கக்கூடாது அல்லவா ?"

உசத்தியருக்குக் கோபம் வந்தது. "பரபுருஷாள ! அப்படியானால் வருணன் ?"

" அது வந்து......" நாரதர் இழுத்தார்.

" சரி போகட்டும்! நான் உம்மைத் தூதாக அனுப்பியும், அவன் கீழ்ப்படியவில்லை. அவனை என்முன் மண்டியிடச் செய்கிறேன் பாரும் " என்று சபதமிட்டு, உசத்தியமுனிவர் ஆற்றங்கரைக்குப் போனார்.

உசத்தியர், ஆற்றோரத்தில் நின்று, தாம் செய்த தவபலத்தை முன்வைத்து, ஒரு மந்திரத்தைச் சொன்னார். உடனே உலகிலிருந்த தண்ணீர் அவ்வளவும்—கடல், ஆறு, ஏரி, குளம், கிணறு, எல்லாவற்றிலுமுள்ள தண்ணீர் திரண்டு அவர் எதிரே வந்து நின்றது. உசத்தியர் மந்திரத்தைச் செபித்தவண்ணம் அந்த தண்ணீரையெல்லாம் ஒரே மூச்சில் கையிலெடுத்துக் குடித்துவிட்டார்.

(தொடரும்)

குடையின் கதை

[ஆ. செயராமன்]

“நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்” என்பது பழமொழி. அந்த நிழலின் அருமையை வேண்டுவார்க்கு வேண்டும்போது தரும் அரும் பண்பைப் படைத்ததுதான் குடை!

குடையின் அருமை பலர்க்குச் சாதாரண நாட்களில் தெரியாது; கடும் வெய்யில் எரிக்கும்போதும், கடுமழை பெய்யும்போதுந்தான் தெரியும்.

குடை, பண்டைக்காலந்தொட்டு, பயன் தரும் ஒன்று என்ற அளவில் மட்டுமல்லாமல், பெருமைக்குரிய ஒன்று என்ற அளவிலேயும் கையாளப்பட்டு வருகிறது. அருமை பெருமைகளை ஒருங்கே பெற்ற குடையின் வரலாறு மிக்கச் சுவையானதாகும்.

குடை என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கில மொழியில் ‘அம்ப்ரெல்லா’ (Umbrella) என்று பெயர். இச்சொல் ‘அம்ப்ரா’ என்ற இலத்தீன் மொழிச்சொல்லின் அடிப்படையாகப் பிறந்தது என்பர். ‘அம்ப்ரா’ என்ற இலத்தீன் சொல் நிழல் என்று பொருள்படுவதாகும். குடை நிழல்தரும் காரணத்தால், ஆங்கிலத்தில் அதற்கு ‘அம்ப்ரெல்லா’ என்ற பெயர் வந்தது. குடை குவிந்து காணப்படும் காரணத்தால் தமிழில் ‘குடை’ என்று பெயர் பெறுவதாயிற்று.

ஞாயிற்றின் வெங்கதிர் உயிரினங்களின் வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படுவதாகும். ஞாயிற்றின் வெபபம் இல்லையேல் உயிரினங்கள் அனைத்தும் அழிந்துபோகும். ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு வெப்பந்தான் தேவைப்படுகிறது. வெப்பத்தின் அளவு மிகக் குறைந்தாலும், மிக மிகப்பட்டாலும் அதனை உயிரினங்களால் தாங்கிக்கொள்ளமுடியாது. மிக்க வெப்பத்தினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள காட்டுமிராண்டி காலத்து மனிதன் மலைக் குகைகளையோ, மரப் பொந்துகளையோ, மர நிழல்களையோ, செடிப்புதர்களையோ நாடினன். எப்பொழுதுமே அந்த நிழல்களில் அவனால் தங்கியிருக்கமுடியவில்லை. காரணம் அப்படித் தங்கியிருக்கும் நேரத்திலெல்லாம் உணவுக்கு வழி கிடைப்பதில்லை. உணவுக்காக வெய்யிலில் அலைந்து திரியவேண்டிய இன்றியமையாமைக்கு அவன் அடிக்கடி ஆளாக்கப்பட்டான். வெய்யிலிலும் அலையவேண்டும், ஆனால் வெய்யிலின் கொடுமையையும் தடுக்கவேண்டும். இதற்கான வழி ஏதும் கிடைக்குமா என்று தன் சிற்றறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தான். இலைகளையும், மரப்பட்டைகளையும், விலங்குகளின் தோல்களையும் பயன்படுத்தித், தன்னை அவைகளால் மூடிக்கொண்டு வெய்யிலின் வெம்மையினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயன்றான். ஆனால் அவையெல்லாம் அவன் விரும்பிய முழு வசதியையும் செய்துதரவில்லை. ‘பசியே நாகரிகத்தின் துவக்க இடம்’ (Hunger is the starting point of Civilization) என்று கார்க்கி கூறியதற்கிணங்க, காட்டுமிராண்டிக் காலத்து மனிதன் தனது பசியாற்றிக்கொள்ளும் முயற்சி நல்ல முறையில் வெற்றிபெற, சூழ்நிலைகளை வசதியானவைகளாக ஆக்கிக்கொள்வதிலே கண்ணுங்கருத்துமாக இருந்தான்.

காலம் சென்றது. மனித நாகரிகமும் சிறிது சிறிதாக வளர்ந்தது. மனித சமுதாயத்தில் மான உணர்ச்சிக்கு மதிப்பு ஏற்பட்டது. தழை, பட்டை, தோல் ஆகியவற்றை ஆடையாக உடுத்திக்கொண்டான். தேவையானபோது அவற்றையே குடையாகத் தூக்கிப்பிடித்துக் கொண்டான். மேலும் நாகரிகம் வளர்ந்தது. பருத்தியினாலும், பட்டினாலும் ஆடைகள் நெய்யக் கற்றுக்கொண்டான். தான் உடுத்திக் கொண்ட பருத்தித்துணி, பட்டுத்துணி ஆகியவற்றாலேயே தனக்குத் தேவைப்பட்ட குடையையும் ஆக்கிக்கொண்டான்.

தோலையும், மரப்பட்டையையும் தன் கையால் குடையாகத் தூக்கிப்பிடித்துக்கொண்ட போது, நீண்டநேரம் அப்படியே பிடித்துக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை. கை வலியெடுக்க ஆரம்பித்தது. பிறகு ஒரு கோலினால் அவற்றைத் தூக்கிப்பிடித்துக்கொள்ள முயன்றான். இலையும், தோலும், துணியும் துவண்டு விழாமல் பரந்து நிற்கவேண்டி,

சிம்புகளால் படகுபோல் செய்து, அதனைக் கவிழ்த்துக், கோலால் தூக்கிப்பிடித்து, அதன்மீது இலையையும், தோலையும், துணியையும் போட்டுக்கொண்டான். இப்படியாகக் குடை உருவெடுக்கத் தொடங்கியது.

மனிதன் முதலில் வெய்யிலை மறைப்பதற்காக என்றுதான் குடையைக் கண்டுபிடித்தான்; அதுவே மழையினின்றும் அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள பயன்பட்டதால், அதற்கும் பயன்படுத்திக்கொண்டான். நாளடைவில் குடை, மனிதனுக்கு, வெய்யில் மழை இரண்டினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஏற்ற ஒரு கருவியாயிற்று.

குடை முதன்முதல் எப்பொழுது தோன்றியது. எங்கு தோன்றியது என்று யாராலும் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறிவிட முடியாது. ஆனால் வெம்மைமிக்க நாடுகளில் தான் அது முதன் முதல் தோன்றியிருக்க வேண்டும் என்றுமட்டும் அறுதியிட்டுக்கூறலாம். குடை எல்லாநாடுகளிலும் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே பழக்கத்திலிருந்துவருகிறது என்னலாம்.

மேலைநாடுகளைவிட கீழைநாடுகளில், தொன்றுதொட்டு, குடை பெருவழக்காய் இருந்துவருகிறது. தமிழகம், ஆரியவர்த்தம், சீனம், பாரசீகம், எகுபதியம், அரேபியம், சாலடியம் போன்ற நாடுகளில் குடை பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுவந்ததோடு, அரசாட்சியின் அடையாளமாகவும், உயர்வின் அறிகுறியாகவும் போற்றப்பட்டுவந்தது.

வெய்யலின் கொடுமையைத் தடுத்து நிழலைத் தரும் தன்மையைக் குடை கொண்டிருத்தலால், தன் ஆட்சி, இயற்கையாலும்—செயற்கையாலும், உள்நாட்டவராலும்—வெளிநாட்டவராலும், பறவையாலும் — விலங்கினாலும் ஏற்படும் கொடுமையெல்லாம் தடுத்து, ஆட்சியில் அடங்கியிருக்கும் குடிமக்களுக்கு நன்மை புரிவதிலே நாட்டங்கொண்டது என்பதை விளக்கிக்காட்ட, அந்தக் குடையை அரசன் தனக்குமேலே உயர்த்திப் பிடிப்பானாயினன், குடிமக்களைக் காப்பாற்றும் அடையாளமாக அரசன் குடையை உயர்த்திப் பிடிப்பானாயினன். குடிமக்களைக் காப்பாற்றும் அடையாளமாக அரசன் குடையை உயர்த்திப் பிடித்ததால், குடைக்குத் தனி உயர்வு ஏற்பட்டது. அந்தக் குடையையே நீதிசெலுத்தும் அடையாளமாகவும், வெற்றிபயக்கும் அடையாளமாகவும் நாளடைவில் கொள்ளத் தலைப்பட்டான். இக்காரணங்கள் பற்றித்தான் தமிழகத்தில் அரசன் ஏந்திய குடைக்கு 'வெண்கொற்றக் குடை' என்ற பெயர் நிலவுவதாயிற்று. அரசனது குடைக்கு மதிப்பும் உயர்வும் ஏற்பட்டவுடனே, அதற்கு மரியாதை செலுத்துவதும், அதனைப் பலவகையாலும் அழகுபடுத்துவதும் எங்கணும் பெருவழக்காயின. அரசன் குடை ஏந்துவது பெருமைக்குரிய ஒன்று என்று ஆனவுடனே, பெருமை படுத்தப்பட வேண்டும் 'ஆண்டவனு'க்கும்—'மதத்தலைவர்'க்கும் குடை ஏந்தவேண்டும் என்று எண்ணினர். உலகின் எல்லா நாட்டு மன்னர்களும், மடாதிபதிகளும் குறிப்பாகக் கீழைநாட்டு மன்னர்களும் மடாதிபதிகளும் குடை ஏந்தினர். அவரவர்களின் உயர்வுக்கும், ஆணைக்கும், செல்வத்திற்கும், மாண்புக்கும் ஏற்றவாறு குடைகள் தோற்றமளித்தன. அரசர்களைப் பின்பற்றி அமைச்சர்கள், படைத்தலைவர்கள், செல்வர்கள், சிறப்புக்குரியோர் முதலாயினோரும் குடைகள் ஏந்தினர்.

அரசர்களாலும், 'ஆண்டவர்'களாலும் குடை பயன்படுத்தப்படும்போது, அது மழைக்காகவும், வெய்யிலுக்காகவும் பயன்படுத்தப்படுவது என்றில்லாமல், பேருக்காகவும் பெருமைக்காகவும் பயன்படுத்தப்படுவது என்று ஆகிவிட்டது. சிறப்புக்குரிய குடையில் வண்ண ஓவியங்கள் வரைவதும், பொன்—வெள்ளி — முத்து — பவளம் — வைரம்—வைடூரியம்—மரகதம்—மாணிக்கம் போன்ற மணிகளைப் பதிப்பதும், தங்கத்தாலும் வெள்ளியாலும் குடைகள் செய்து, அவற்றில் மணிகளைப் பதிக்கவும் செய்தனர். பல பொருள்களைக் குடையில் பதிக்கவேண்டியிருந்ததாலும், பல வண்ண ஓவியங்களை அதில் தீட்டவேண்டியிருந்ததாலும், அளவிற் சிறியதாய் இருந்த குடை அளவிற் பெருகியது. குடையின் பளுவும் மிகவாயிற்று. எனவே அதைத் தாங்கள் செல்லும்போது எடுத்துவர சில பணியாட்களைக் குடைபிடிப்பதற்கென அரசரும் பிற பெருமக்களும் அமைத்துக்கொண்டனர். அரியணைகளின்மீதும், யானை அம்பாரிகளின்மீதும் குடைகளை வைத்து அழகுபடுத்தினர். இப்பொழுதும் கடவுளின் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போது பெரும் பெரும் குடைகள் அழகுக்காக எடுத்துச் செல்வதைக் காணலாம். தேர்களின் மீது குடை கட்டுவது சிறப்பு கருதிச் செய்யப்படுவதேயல்லாமல், அவசியத்தை ஒட்டிச் செய்யப்படுவதல்ல.

பண்டைத் தமிழகத்தில் தென்னங் கீற்றுக் குடைகளும், பனையோலைக் குடைகளும், தாழ

குடைகளும் சாதாரண மக்களால் பயன்படுத்தப்பட்டன. இப்பொழுதும் தமிழகத்தின் சிற்றூர்ப் பக்கங்களில் அத்தகைய குடைகள் வழக்கத்தில் இருந்துவருவதைக் காணலாம். கைப்பிடி இல்லாமல் மேலே போர்த்திக் கொள்ளுகிற மாதிரியில் தென்னங்கீற்றினாலும், பனை ஓலையினாலும் ஆன 'குடலை'களைக், குடைகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தும் பண்பு இன்றும் சிற்றூர்ப்புறங்களில் இருந்து வருகிறது.

பண்டைக் கிரேக்கர்களும், உரோமர்களும் குடைகளை அவ்வளவாகப் போற்றிக்கொள்ளவில்லை. யாராவது ஒருவர் குடை பிடித்துக் கொண்டுவந்தால் அவரை யாரும் எள்ளி நகையாடுவது வழக்கம். வெய்யிலுக்கோ அல்லது மழைக்கோ அஞ்சிக் குடைபிடிப்பது கோழைத்தனம் என்றும் பெண்மைப்பண்பின் கூறுபாடு என்றும் கருதினர். குடை, பெண்கள் மட்டுமே பயன்படுத்தவேண்டிய கருவி என்று கொண்டனர். பெண்கள் மென்மை வாய்ந்தவர்களாதலால், அவர்களுக்கு மட்டுமே குடை அவசியமானது என்று கருதினர்.

மேலைநாடுகளுக்குக் குடைகள் சீனாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும்தான் சென்றன. மேலை நாடுகளுக்குக் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில்தான் குடை நல்ல முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது என்னலாம். கி. பி. 1630-ஆம் ஆண்டு வாக்கில் மேலை நாடுகளில் குடை நன்றாக அறிமுகம் பெற்றுவிட்டது. சீனநாட்டுக் குடைகள் பலவாக மேலைநாடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. சீனக் குடைகள் எண்ணெய்தோய்ந்த பட்டுத்துணியால் பெரும்பாலும் செய்யப்பட்டிருந்தன, குடைகள், உயர்குலப் பெண்கள் மட்டுமே பயன்படுத்தத்தக்கன என்று முதலில்கொண்டனர்.

முதன் முதலில் இலண்டன் நகரத்தின் தெருக்களில் குடையைப் பிடித்துச் சென்றவர் சோனாச் அன்வே (Jonas Hanway) என்பவர் ஆவார். அவர் சீனாவிற்குச் சென்றுவிட்டுத் தம் தாய்நாட்டிற்குத் திரும்பும்போது சீனக் குடை ஒன்றை எடுத்துச்சென்றார். அவர் குடைபிடித்துச் செல்வதைக் கண்ட பொது மக்கள் கேலியும், கிண்டலும் செய்தனர். எள்ளி நகையாடினர். தாம் கொண்டுவந்ததைப்போன்று பல குடைகள் செய்து பல நண்பர்களுக்கும் அவர் கொடுத்தார். முதலில் குடைபிடித்துச் செல்வோரெல்லாம் எள்ளி நகையாடப்பட்டனர். யார் செய்யும் கேலியையும், கிண்டலையும் சற்றும் பொருட்படுத்தாமல் அன்வே குடைபிடித்தலைப் பழக்கமாக்கினார். ஆனால் நாளடைவில் பற்பல விதமான குடைகள் இலண்டன் கடைத் தெருக்களில் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டுப், பெரும்பாலோரால் வாங்கப்பட்டன.

இற்றைக்காலத்தில் காணப்படும் துணிக் குடைகள் முதன்முதலில் சிங்கப்பூரிலிருந்து தான் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டன. 1860-ஆம் ஆண்டில் பம்பாய் வணிகர் ஒருவர் இங்கிலாந்திலிருந்து ஏராளமான குடைகள் வரவழைத்து விற்பனை செய்தார். அவைகள் சாதாரண இந்தியர்கள் வாங்கமுடியாத அளவுக்கு மிகவான விலை படைத்தனவாக இருந்தன. 1902-ஆம் ஆண்டில் குடைக்கம்பிகள் கட்டைகள் முதலியன மட்டும் இறக்குமதி செய்யப்பட்டு, மலிந்த விலைக்கு இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டன. பின்னர் இங்கேயே பல குடை உற்பத்திசாலைகள் தோன்றலாயின.

இந்தியத் துணைக்கண்டத்தின் கலையிலும், இலக்கியத்திலும், வரலாற்றிலும் குடையைப் பற்றிய குறிப்புகள் பல ஆங்காங்கே காணப்படுகின்றன.

பண்டைத் தமிழர்கள் பழம்பெருங் காலந் தொட்டே குடையை நன்கு அறிந்து பயன்படுத்திவந்தனர். கதிரவனின் ஒளிக்கதிர்களைச் சிதறடிக்கவல்லது வெண்குடையே என்பதை அறிந்து, அதனைப் பழக்கத்தில் கொண்டிருந்தனர்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் குடையைப்பற்றிய குறிப்புகள் சிலசில காணக்கிடக்கின்றன.

மலேயாவில் குடையை ஒருவித பாதுகாப்புக்கருவி என்றே கருதி வருகின்றனர். காட்டில் புலி எதிர்ப்பட்டு வரும்போது, அதன் முன் குடையை விரித்தும் மடித்தும் நின்றால், புலி ஓடிவிடும் என்பது அம்மக்களின் நம்பிக்கை.

இன்றைய நிலையில் சப்பானிலும், பர்மாவிலும் தயாரிக்கப்படும் குடைகள்தாம் மிக்க அழகுவாய்ந்தவையாகும். கவர்ச்சிகரமான ஓவியங்கள், அவற்றின்மீது காணப்படும். பர்மிய பெண்கள், குடைபிடித்துச் செல்வது தான் பெண்களுக்கு அழகுபயக்கும் பற்றுக்கோடு என்று கருதுகின்றனர். பர்மியப் பெண்கள் குடையின்றி வெளியே செல்வது அரிதிலும் அரிது ஆகும்.

குடை ஒருவரால் அழகுக்கும், உயர்வுக்கும் சிறப்புக்கும் அறிகுறியாகப் பயன்படுத்தப்பட்டாலும், கறுப்புத்துணிக்குடை அவசியத்திற்காகப் பலரால் பயன்படுத்தப்படவே செய்கின்றது!

மிராபோ

பிரான்சு நாட்டில் 18-ம் நூற்றாண்டில் பெரும் புரட்சி ஏற்பட்டபோது தோன்றிய தலைவர்களில் மிராபோ தலைசிறந்தவராவார். புரட்சித் தலைவர்களில் மிராபோ ஒருவர் மட்டுமே புகழோடு வாழ்ந்து இயற்கையாக இறந்தவராகும். மற்றவர்களெல்லாம் கொலை செய்யப்பட்டு இறந்தனர்.

மிராபோவின் முழுப்பெயர் கேப்ரியல் அனோர் ரிகட்டி டி மிராபோ (Gabriel Honore Requetti de Mirabeau) என்பதாகும். பிரான்சின் தென் பகுதியில் 1749-ம் ஆண்டு பிறந்தார். புரட்சிக்கு முன்வரை மிராபோ மக்களால் தூற்றப் பட்டவரேயல்லாமல் போற்றப்பட்டவரல்ல. பற்பல குற்றங்கள் செய்து சிறைவாழ்வை பெரிதும் அனுபவித்தவர். எல்லா மக்களிடையேயும் எல்லாவகையிலும் பழகியவர். அவருக்குக் காதலியர் பலர்.

இப்படிப்பட்ட வாழ்க்கை கொண்டவராக மிராபோ இருந்தபோதிலும் புரட்சியின்போது மக்களின் பேராதரவு இவருக்குக் கிடைத்தது. இதற்குக் காரணம் அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவும், சொற்பெருக்காற்றும் திறனுமேயாகும். மக்கள் சபையில் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பதினாறாம் லூயி கூட்டிய சபைக்குச் சென்றான். அதிலிருந்து அவனுடைய புகழ் பரவ ஆரம்பித்தது.

புரட்சிக்காலத்தில் தோன்றிய தலைவர்களிலெல்லாம் மிராபோ ஒருவரே சிறந்த அரசியல்வாதியாகும். மிராபோ இன்னும் ஐந்து ஆண்டுகள்கூட வாழ்ந்திருந்தால் சரித்திரத்தையே மாற்றியிருக்கக்கூடும். தான் சாகும்வரை மிராபோ புரட்சிக்காரர்களை கட்டுப்பாட்டுடன் வைத்திருந்தான். ஆனால் பிரான்சு நாட்டிற்கு ஒரு புதிய அரசியல் முறையை வகுப்பதற்குள் சாவு அவரை எதிர்கொண்டுவிட்டது. மக்கள் மனதில் ஏற்பட்ட எதிர்ப்புணர்ச்சி அடங்கவில்லை; அதை அடக்கத்தகுந்த அரசியல் முறையும் இல்லை. அதனால் நாடு சின்னா பின்னமாயிற்று. பல நூற்றாண்டுகளாக மக்களைக் கொடுமைப்படுத்திவந்த அரச, பிரபு மரபினரை ஒருசில ஆண்டுகளில் மக்கள் கொன்று குவித்தனர்.

மிராபோ நாட்டை நல்வழிப்படுத்த மிகவும் நாட்டங்கொண்டிருந்தார். பிரான்சு, மக்களுக்கேற்ற வகையில் அமையப்பெற்ற அரசியல் முறையைக் கொண்ட ஒரு முடியாட்சியாக்கிவிடவேண்டும் என்று கனவுகண்டார். ஆனால் ஆத்திரங்கொண்ட மக்களும் அதிகாரம் செய்துவந்த பிரபுக்களும் எதிரெதிராக இருக்கும்போது, 1791-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் நாள் மிராபோ இயற்கையெய்தினார். மக்கள் ஒரு ஒப்பற்ற தலைவனை இழந்ததற்காக வருந்தினர். பிரபுக்கள் ஒரு சமாதானத்தூதுவன் மறைந்ததற்காக வருந்தினர். முடியரசின் பாதுகாவலன் இறந்துவிட்டான் என்று மன்னன் மனமுடைந்துபோனான்.

பிரான்சு நாடே மிராபோவின் மறைவு கேட்டு வருந்தியது. எங்கும் கடைகள், விடுதிகள், நாடகங்கள், பொழுதுபோக்குச் சாலைகள் யாவும் மூடப்பட்டன. பாரிஸ் மக்கள் தனது ஒப்பற்ற தலைவனுக்கு இறுதி மரியாதை செய்தது. ஏப்ரல் திங்கள் நான்காம்நாள் மிராபோவின் பெரியதோர் சவ ஊர்வலம் நடைபெற்றது. மிராபோவின் சவம் புகழ் பெற்றவர்களுக்கென இருந்த பான்தியன் (Pantheon) என்ற கட்டிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. பான்தியன் கட்டிடத்திற்குள் நுழைந்த முதல் மக்கள் பிரதிநிதி மிராபோவேயாகும்.

467

மயிலை ஆ. சேக்கிழார் தொண்டைமான்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தங்கம் ஒருமுறை சிறைச்சாலைக்குப்போயிருந்தாள். சிறைச்சாலை யென்றால், மிக இருண்ட, பாதாள அறைகள் கூடியது என்பது தங்கத்தினுடைய எண்ணம். கதைகளில் வருகிற சிறைச்சாலைகள் அப்படித்தானே இருக்கின்றன; ஆனால் சிறைச்சாலைக்குள் போனதும் ஏதோ ஒரு உயர்ந்த மதில்களையுடைய பள்ளிக்கூடத்துக்குள் நுழைவதுபோலிருந்தது. உள்ளே கைதிகளும் எதேச்சையாக வேலை செய்துகொண்டிருந்தனர். பலமான விலங்குகள், சங்கிலிகள் அவர்களைத் தடுத்துக்கொண்டிருக்கவில்லை. சிறையென்பதை ஞாபகமூட்டிக்கொண்டிருந்தது, இரும்புக் கம்பிகள்தாம்! கதவு பலகணி, வாயிற்படி, மாடியோரம் எல்லாம் பலமான இரும்புக் கம்பிகளால் தடுக்கப்பட்டிருந்தன. இரும்புக்கதவுகளைத் திறக்கும்பொழுது, 'கர்'ரென்று ஒருவிதச் சத்தத்தை உண்டாக்கின, இரும்புத் தாழ்ப்பாள்கள் 'டன்'னென்று விழுந்தன. இவைதாம் சிறைச்சாலை என்பதைத் தங்கத்திற்குக் காட்டின.

தங்கம் பயந்தது, சகுந்தலா மிகவும் சோர்வடைந்து, மனவருத்தத்துடன் இருப்பாளென்று. அவள் பயந்ததற்கு மாறாகச் சகுந்தலா உடல் நலத்துடன் காணப்பட்டாள். சிறைச்சாலைக்குப்போகும்பொழுது இருந்ததைவிட இப்பொழுது உற்சாகத்துடன் இருந்தாள்.

"எப்படியிருக்கிறது?"

"இப்பொழுதுதான் சிறைவாழ்க்கையுடன் ஒத்துப்போக தயாராகிவிட்டேன்."

"உணவு எப்படியிருக்கிறது? ஒத்துக்கொள்ளுகிறதா?"

"முதலில் ஒதுக்கித்தள்ளிக்கொண்டிருந்தேன்! இப்பொழுது அது சுவையுள்ளதாக ஆகிவிட்டது. கொடுப்பது போதாதுபோலிருக்கிறது."

சகுந்தலா அனாதைச் சிறுவர் இல்லத்தைப் பற்றிக் கேட்டாள். வழக்கு ஆரம்பமானதிலிருந்து மற்றவற்றைப்பற்றி நினைக்க அவளால் முடியாமலிருந்தது. இப்பொழுது சிறைச்சாலையில் கிடைக்கும் நேரத்தில், சிறுவர் இல்லம் கவனத்திற்கு வந்தது.

"இப்பொழுது புதிதாக ஒருத்தியை நியமித்திருக்கிறோம். ஆனால் அவளால் சரியாக நிர்வகிக்க முடியவில்லை, குழந்தைகளும் அந்த அம்மா எங்கேயென்று கேட்டபடிதான் இருக்கிறார்கள்?"

"நான் அமைதியுடன் காலங்கழித்தது, என் சிறுவயதில், அந்தச் சிறுவர்களுடைய மத்தியில். இரண்டும் காலத்தில் கழிந்துவிட்டது!"

சிறைக்குள் போனதும் இத்தகைய வேதாந்த மனப்பான்மைகள் வந்துவிடும்போலும். தங்கம் உற்சாகப்படுத்தக் கூறினாள். "நீ வெளிவந்ததும், திரும்ப அங்கேயே வேலை பார்க்கலாம்."

இல்லையென்று சகுந்தலா தலையசைத்துக்கொண்டாள்.

"டாக்டர், வக்கீல் இருவரும் சென்றவாரம் வந்திருந்தார்கள்."

டாக்டர் சஞ்சீவி சகுந்தலாவைப் பார்த்துவிட்டு வந்ததாகத் தங்கத்திடம் சொல்லியிருக்கிறார். ஆனால் குலசேகரன் வந்திருந்ததைப் பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை.

"இருவரும் ஒன்றாக வந்திருந்தார்களா?"

"இல்லை, முதலில் அவர் வந்திருந்தார், இரண்டு நாட்களுக்குப்பின் டாக்டர் வந்தார்."

தங்கம் சிறைச்சாலைக்கு சகுந்தலாவைச் சந்திக்கப்போவதாக அதற்கு முதல் நாள் குலசேகரனிடம் சொல்லிக்கொண்டிருந்தாள், அப்பொழுதும், தான் சிறைச்சாலைக்குப் போய்வந்ததாக அவன் கூறவில்லை. ஒரு வேளை, முக்கியமான செய்தியல்லவென்று அவன் விட்டிருக்கலாம்.

சகுந்தலாவிடம் விடை பெற்றுக்கொண்டு தங்கம் திரும்பினாள்.

ஆறு நாட்கள் கழித்து சகுந்தலா வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டாள்.

* * *

மாரிக்காலத்தின் ஆரம்பம் மிகப்பலமாக இருந்தது. வானம் பொத்துக்கொண்டு ஊற்றுவதைப்போல, மழை பொழிந்தது. காரின் மீது வழிகிற தண்ணீர் கண்ணாடிமீது சிதறிப் போய்க்கொண்டிருந்தது. வெளியில் மழைத் தண்ணீர் அரைவட்டமாக விலக்கப்பட்ட போதிலும், கண்ணாடிமீது பனிபடர்ந்து கொண்டிருந்தது, இடது கையால் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டு, தங்கம் வலது புறம் காரைத் திருப்பிக்கொண்டாள். அவளுடைய வீட்டு வாசற்படியின்முன் கார் நின்றது.

மழையில் தாண்டிக்கொண்டு வீட்டிற்குள் வந்தாள். முன் ஹாலில் கமலநாதன் உட்கார்ந்திருந்தான்.

“அப்பாடா! எப்படிப்பட்ட மழை!”

கமலநாதனுக்கு அருகிலிருந்த நாற்காலியில் தங்கம் உட்கார்ந்தாள். கமலநாதன் அவளைப் பார்க்காமலே, “ஆமாம்! நல்ல மழை!” என்று கூறிவிட்டு, பக்கத்திலிருந்த பத்திரிக்கையை எடுத்துக்கொண்டான்.

கமலநாதனின் சொற்கள் குளிர்ந்து, கடுமையாகக் காணப்பட்டன. தங்கம் சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தாள். கமலநாதனின் கண்கள் பத்திரிக்கையை விட்டு அகலவில்லை, முதற் பக்கத்திலிருக்கும் விளம்பரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தன.

தங்கம் எழுந்து, மாடிக்குச் சென்றாள். மாடிப் படிகளில் ஏறிச்செல்லும்பொழுது ஒவ்வொரு படியிலும் விழுந்துவிடுபவள்போல இருந்தாள். என்ன நடந்துவிட்டது? அவர் ஏன் இப்படியிருக்கிறார்? தங்கம் தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள். மனதில் குழப்பம் அதிகரித்ததேயல்லாமல், கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லை. ஆஸ்பத்திரியில் வேலைகளை முடித்துக்கொண்டு, எவ்வளவு வேகமாக அவள் வீடுதிரும்பினாள். இங்கு வந்தால்!

முன்பெல்லாம், தங்கத்தின் கார் ஹாரன் சத்தம் கேட்டதும், கமலநாதன் தயாராய் வெளிவந்து நிற்பான். கார் வந்து நின்றதும் அருகில் போய்க் கதவைத் திறந்து “ஏன் இவ்வளவு நாழி?” என்று அவன் கேட்கத் தவறுவதில்லை.

ஆஸ்பத்திரியில் நடந்தது, தான் யார் யாரைப் பார்த்தது, எல்லாவற்றையும் தங்கம் ஒப்பிப்பாள். ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வரும்பொழுதே இன்றைக்கு என்னென்ன தன் கணவனிடம் சொல்லவேண்டுமென்று தங்கம் திட்டமிட்டுவருவாள். காரில் தங்கம் அமர்ந்தபடி, கமலநாதன் அருகில் நின்றபடி —இப்படியே அவர்கள் நீண்டநேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். கடைசியாகப் பகலின் வெளிச்சம் மறையும்பொழுது, வீட்டிற்குள் போகலாம் என்ற உணர்வு வரும்.

இரண்டுவாரமாக, தங்கம் திரும்பிவரும் பொழுது கமலநாதனை வெளியில் காணமுடியவில்லை. கமலநாதன் மாலை நேரத்தில் ஏதாவது அலுவல்கள், பொழுதுபோக்குச் சங்கம் இவற்றில் இருந்துவிட்டு, நேரங்கழித்துவருவான், சாப்பாட்டு நேரத்தின்பொழுதுதான் இருவரும் சந்திப்பது.

அதிலும் இன்று, தான் வந்ததைக் கவனிக்க மறுத்தது மட்டுமல்லாமல், பேச்சுக் கொடுத்தபொழுதும் பதில் சரியாகக் கொடுக்கவில்லை. தங்கம் அழாத குறையாகப் படுக்கையில் படுத்திருந்தாள்.

சாப்பிடும் நேரம் வந்தது. சமையற்காரன் தட்டுகளை எடுத்துவைக்கும் சத்தம் கேட்டது. தங்கம் இறங்கிப்போகவில்லை. தன் கணவனிடம் உள்ள கோபத்தில் மேலேயே இருந்து விடுவது என்று தீர்மானித்தாள். தான் கீழே வராததைக் கண்டதும் அவர் மேலே வருவார்.

“தங்கம்! தங்கம்!” என்று கூப்பிடுவார். இருட்டில் இருந்தபடி அவள் பேசாமலிருப்பாள். பதில் வராததைப் பார்த்ததும், அவர் விளக்கைப் போடுவார். அப்பொழுதும் அவள் பேசாமல் படுத்திருப்பாள்.

“தங்கம்! சாப்பிட வரவில்லையா?” மிகக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டு அவர் வருவார். வேறு பக்கம் திருப்பிக்கொண்டு அவள் படுத்துக்கொள்வாள்.

" தங்கம்! தங்கம்! உடம்புக்கு ஏதாவதா?" நெற்றியை அவர் தொட்டுப் பார்ப்பார்.

" சரிதான்! ரொம்ப அக்கரை!" கையை உதறித் தள்ளி அவள் வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொள்வாள்.

" தங்கம்! கோபமா?"

" கோபமா? எனக்கா? உங்கள்மீதா? சேச்சே! கிடையவே கிடையாது?"

" தங்கம்! இதோ என்னைப்பார்!"

" இதோ பார்த்துவிட்டேன்! போதுமா! போங்கள்! நான் தூங்கவேண்டும்" அவள் அலுத்துக்கொள்வாள்.

" சாப்பிடாமலா? வா சாப்பிட!" அவர் தூக்கி உட்காரவைப்பார்.

" சாப்பாடும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்!" என்று அவள் தன்னை விடுத்துக்கொள்வாள்.

" என் கண்ணல்ல! வா, போகலாம்! நான் செய்தது பிசகு, என்னை மன்னித்துவிடு!" என்று அவர் மன்றாடிக் கேட்டுக்கொண்டு, அவளை அழைத்துச் செல்வார்.

இதுபோல பலதடவைகள் கமலநாதனுக்கும் தங்கத்திற்கும் கோபதாபங்கள்—கணவன் மனைவியரிடை வரக்கூடிய ஊடல்கள் வந்து தீர்ந்திருக்கின்றன. அவ்வாறு இன்றும் எதிர்பார்த்து தங்கம் படுத்திருந்தாள். முதலில் அவர் "தங்கம்!" என்று மென்மையான அன்புக்குரலில் கூப்பிடும்பொழுது மட்டும் மனதை இளகவிடாமல், சிறிது கடுமையாக இருந்தால் போதும். இன்று விடக்கூடாது, சரியானபடி கோபித்துக்கொள்ள வேண்டும் என்று தங்கம், கமலநாதன் வருகையை எதிர்பார்த்தபடி படுத்திருந்தாள்.

மாடிப் படிகளில் சத்தம் கேட்டது. தங்கம் கண்ணை மூடிக்கொண்டாள்.

" தங்கம்!"

குரல் வந்தது. கூப்பிட்டது கமலநாதனல்ல, பொன்னம்மாள்!

" ஏன்?" கோபத்துடன் தங்கம் கேட்டாள்.

" சாப்பிட ஐயா உட்கார்ந்துவிட்டார்கள். உங்களைக் கூப்பிட்டுவரச் சொன்னார்கள்."

" பசியில்லை, போ!"

" ஏனம்மா?"

" பசியில்லை, ஆயா! போய்ச் சொல்லு, அவரை மட்டும் சாப்பிடச் சொல்லு!"

பொன்னம்மாள் கீழே இறங்கிப்போய், " அம்மாவுக்குப் பசியில்லையாம்!" என்று சொல்வது மேலே கேட்டது.

கமலநாதன் எழுந்துவந்து தன்னைக் கூப்பிட்டுப் போவாரென்று தங்கம் எதிர்பார்த்தாள். நெடுநேரம் காத்திருந்தும் அவரைக் காணோம். ஒருவேளை, தான் சாப்பிட வராததால் அவரும் சாப்பிடாமல் இருக்கிறாரோ என்ற கவலை தங்கத்துக்குவந்தது. போனால் போகிறது, சமாதானமாகப் போய்விடுவோம், இனிமேலும் அப்படி அவர் அக்கரை காட்டாமல் இருந்தால், கடுமையாகக் கோபித்துக் கொள்வேன் என்று தங்கம் கீழே இறங்கி வந்தாள்.

சாப்பாட்டு மேஜையில், கமலநாதன் சாப்பிட்ட தட்டு இருந்தது. அவளுக்கு வைக்கப்பட்ட தட்டு காலியாக இருந்தது.

தானில்லாமல் அவர் மட்டும் சாப்பிட்டிருக்கிறார்! தங்கத்திற்கு ஆத்திரம் தாங்கமுடியாமல் திரும்ப மேலே போனாள். அழுகை வரும் போலிருந்தது. படுக்கையில் படுத்துக்கொண்டாள். கணவன் தன்னிடம் சரியானபடி அக்கரை காட்டவில்லை. அதைவிட அதிகமான மனக்குறை—மனவேதனை ஒரு பெண்ணுக்கு ஏற்படமுடியாது.

காலையில் எழுந்ததும் தங்கத்திற்கு மனநோவுடன் தலைவலியும் இருந்தது. இரவு அவளுக்குத் தூக்கம் இல்லை. கண்விழித்தும், நெடுநேரம் படுக்கையில் படுத்தபடி இருந்தாள். அன்று ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாள். வேலை நாளாக இருந்தாலும் நன்றாக இருந்திருக்கும்.

தங்கம் என்னசெய்வதென்று யோசித்தாள். வீட்டில் இல்லாமல் வெளியில் போய்விடலாமென்று தோன்றியது. முன்பெல்லாம் ஓய்வு நாள் எப்பொழுது வரும் என்று காத்திருப்பாள். இப்பொழுது விடுமுறை வரும்பொழுது, ஏன் வந்தது என்று இருக்கிறது.

காலையில்கூட தன் கணவன் கூப்பிட்டுச் சமாதானம் சொல்வார் என்ற லேசான நம்பிக்கை தங்கத்திற்கு இருந்தது. ஆனால் மணி எட்டு ஆகியும், வெளிச்சம் மந்தமாகவே இருந்தது.

ஜன்னல் கதவைத் திறந்து தங்கம் வெளியில் பார்த்தாள். இரவு பெய்த மழை தரையை ஈரமாக்கியிருந்தது. செடிகொடிகளில், இருந்த

தண்ணீர் முத்துமுத்தாக கீழே நழுவிக்ககாண்டிருந்தது. சூரியனின் முகம் மலராதது கண்டு, மலர்ச்செடிகள் அழுவதுபோலிருந்தது,

எல்லாம் வீண் உபமானம் தன்னைப்போல் யாரும் வேதனைப்பட்டிருக்கமாட்டார்கள் தன் மீதே பரிதாபம் காட்டிக்கொண்டு, தங்கம் பல் துலக்க, குளிக்கக் கீழே வந்தாள். அப்பொழுதும், "ஏன் இவ்வளவுநாழி?" என்று கமலநாதன் கேட்கக்கூடும் என்று அவள் எதிர் பார்த்தாள். எப்பொழுதும் தங்கம்தான் முதலில் எழுந்து, குளித்து முடித்து மேல் வந்து, கமலநாதனை எழுப்பிவிடவேண்டி யிருக்கும். ஆனால் இன்று, தங்கம்தான் பின் எழுந்து வருகிறாள். கமலநாதன் அவளைப்பற்றி கேட்கவில்லை.

ஒருசமயம் வெளியில் சென்றுவிட்டாரோ என்று தங்கம் முன்பக்கம் வந்தாள். அங்கு கமலநாதனும், சாமியாரும்—அதுதான் நித்தியானந்த சாமிகளும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

"வர வர, இந்த சாமியார் இங்கு வருவது அதிகமாகிவிட்டது" என்று முணுமுணுத்துக்கொண்டு தங்கம் உள்ளே போனாள். நித்தியானந்தசாமியார் மெதுவாகப் பாடுவது—ஏதாவது பஜனைப் பாட்டாகத்தான் இருக்கும். அவள் காதில் விழுந்தது.

சிறிது நேரங்கழித்து, "தங்கம்!" என்று கமலநாதன் கூப்பிட்டான்.

தலை சீவி முடித்துக்கொண்டிருந்த தங்கம், அவசரமாக ஓடிவந்தாள். கடைசியாக அவர் பேசிவிட்டார்! "ஏன்?" என்று புன்னகையும், சற்றுக் கோபத்துடன் அவள் வந்தாள்.

கமலநாதன் அவளைப்பார்க்காமல், "இதோ! உனக்குப் போன்!" என்று மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த போனைக் காட்டினான்.

தங்கம் போனை எடுத்தாள்.

"ஆமாம்; தங்கம். பேசுகிறது சேகரா?"

சேகர் என்று கேட்டதும், கமலநாதன் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டான்.

"உம், உம்! இன்றைக்கு எனக்கு ஓய்வுதான். அவசியம் வா! நானும் வருகிறேன்," தங்கம் பேசினாள். மறு பக்கத்திலிருந்து ஏதோ பேச்சு வந்தது.

தங்கம் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு, "இன்னும் அரைமணி நேரத்தில் நான் தயாராக இருக்கிறேன்! வந்துவிடு!" என்று பேச்சை முடித்துவிட்டு, போனைக் கீழே வைத்ததும்,தங்கம் போனாள்.போனைப்பார்த்தபடி, தங்கத்தைப் பார்த்தபடி கமலநாதன் நின்றுகொண்டிருந்தான்.

அரைமணிநேரங்கழித்து வெளியில் கார் சத்தம் கேட்டது. கமலநாதன் தன் நாற்காலியைவிட்டு எழுந்து ஜன்னல் வழியாகப் பார்த்தான். காரை குலசேகரன் ஓட்டிவந்து நிறுத்தினான். தங்கம் ஒரு கைப்பையுடன் போய் கார் பின்பகுதியில் ஏறிக்கொண்டாள். தங்கம் சிரித்துக்கொண்டு ஏதோ சொன்னாள். கார் புறப்பட்டுப் போனது.

எங்கு போகிறார்கள்? கமலநாதனுக்குப் புதிராக இருந்தது. பொன்னம்மாளைக் கூப்பிட்டுக் கேட்கலாம் என்று நினைத்தான். ஆனால் மற்றவர்களைக் கேட்பது நன்றாக இருக்காது. ஆதலால் பொன்னம்மாவைக் கூப்பிட்டு "நான் மத்தியானம் சாப்பிட வர நாழியாகும்! அம்மா எப்பொழுது வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்கள்?" என்று கேட்டான்.

"அவர்கள் வேலூரல்லவா போயிருக்கிறார்கள். இராத்திரிதானே திரும்புவார்கள்."

வேலூர்! எதற்காகப் போகிறார்கள்? கமலநாதன் கேட்டுக்கொண்டான்.

வேலூர் போகும் வழியில், குலசேகரனின் கார் போய்க்கொண்டிருந்தது. முதலில், குலசேகரனும் டாக்டர் சஞ்சீவியும், இருந்தார்கள். பின்னால் தங்கம் தனியாகஉட்கார்ந்திருந்தாள்.

"ஒரு வழக்கு சம்பந்தமாக, வேலூரில் எனது நண்பர்—வக்கீல் ஒருவரைப் பார்க்க வேண்டும். அப்படியே வேலூர் சிறையிலிருக்கும் சகுந்தலாவை நீங்கள் பார்க்க வருவீர்களென்று அழைத்தேன்."

"அப்படியானால் நீ வரவில்லையா?"

"உங்களுடன் நானும் வருகிறேன். ஆனால் எனக்கு எனது நண்பரைப் பார்ப்பதுதான் முக்கியமான வேலை" குலசேகரன், சகுந்தலாவைப் பார்ப்பதில் அதிக அக்கரையில்லாதவன்போல் காட்டிக்கொண்டான்.

இரவு தங்கம் திரும்பும்பொழுது மணி எட்டுக்குமேலாகிவிட்டது. தங்கத்தை இறக்கிவிட்டு, டாக்டர் சஞ்சீவியும், குலசேகரனும் சென்றுவிட்டார்கள். தங்கம் இறங்கி வருவதைக் கமலநாதன் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான், தான் போய்வந்த விவரத்தையும் சிறை சட்டதிட்டங்களைப்பற்றிச் சுடச்சுட சில சொல்லவேண்டுமென்றும் தங்கத்திற்கு இருந்தது. ஆனால் கமலநாதன் அவளுடன் பேச்சு கொடுக்கவில்லை. தங்கம் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டு முடித்தாள். (தொடரும்)

வினாவும் விளக்கமும்

வினா : திராவிடம் தனி நாடாக உருவெடுக்கும்போது திராவிடத்தில் வாணிகம் செய்யும்—வாழும் வடவரின் நிலை என்ன ஆகும் ?

விளக்கம் : திராவிடத்தைத் தம் தாய்நாடாகவும், தம் பிறப்புரிமைக்குரிய நாடாகவும் கருதித், திராவிடத்தோடு நீங்காத் தொடர்பு பூண்டு, தாம் திராவிடத்திற்குரியவர்களே என்று எண்ணுகின்ற அவ்வளவு திராவிடர்களும், திராவிடத்தோடும்-திராவிடர்களோடும் இரண்டறக் கலந்தவர்களாய்த், திராவிடத்தோடு நீங்காத் தொடர்பு கொண்டவர்களாய்த், திராவிடத்தைத் தவிர வேறு இடத்தைத் தாய்நாடாகக் கொள்ளாதவர்களாய் ஆகிவிட்ட திராவிடர்களோடு ஒட்டியவர்களும் திராவிடத்தின் குடிமக்கள் பட்டியலில் இயற்கையாகவே சேர்க்கப்படுபவராவார்கள்.

வேறுநாட்டைத் தம் தாய்நாடாகவும், பிறப்புரிமைக்குரிய நாடாகவும் கருதிக்கொண்டும், வைத்துக்கொண்டும் திராவிடத்தில் வாழ்வு நடத்துபவர்கள் அத்துணைப்பேரும் வேற்று நாட்டவர் என்ற பட்டியலில் சேர்க்கப்படுபவராவார்கள்.

திராவிடத்தில் வாணிகம் செய்யும் அல்லது வாழும் வடநாட்டவர்கள், வடநாட்டைத் தங்கள் தாய்நாடாகவும், தங்கள் குடியுரிமைக்குரிய நாடாகவும் அமைத்துக்கொண்டு திராவிடத்தில் இருப்பார்களேயானால், அப்படிப்பட்டவர்கள் அனைவரும், வேற்றுநாட்டவர் என்றே கணக்கிடப்படுவர். வேற்றுநாட்டவர் எத்தகைய சலுகைகளையும், உரிமைகளையும், வசதிகளையும் திராவிடத்தில் பெறலாம் என்று திராவிடத்தின் ஆட்சி விதிமுறைகள் வகுக்கின்றதோ, அத்தகைய சலுகைகளையும்—உரிமைகளையும்—வசதிகளையும் மட்டுமேதான் அந்த வடநாட்டவர்கள் பெறமுடியும். வடநாட்டு அரசுக்கும் திராவிடநாட்டு அரசுக்கும் இடையே தனிச்சலுகைகளை அளிக்கும் தனி உடன்படிக்கைகள் ஏற்படுமேயானால், அந்த உடன்படிக்கைகளுக்கு ஏற்ப சிலபல சலுகைகளை அந்த வடநாட்டவர்கள் பெறும்படி ஏற்படலாம்.

வடநாட்டைத் தம் தாய்நாடாகக்கொண்டு, திராவிடத்தில் வந்து வாணிகமோ அல்லது வேறு தொழிலோ, செய்யும் வடநாட்டவர்கள், திராவிடத்தைவிட்டு வெளியேறும்போது, ஒரு வெளிநாட்டான் எவ்வளவு பணம் கொண்டுபோகலாம் என்று திராவிட ஆட்சி வகுக்கிறதோ, அவ்வளவு பணத்தை மட்டுந்தான் கொண்டுசெல்ல அவர்கள் அனுமதிக்கப்படுவார்களே ஒழிய, இப்பொழுது சுரண்டிச் செல்வதைப்போல கொள்ளையடித்துக் கொண்டுபோக அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பொழுது இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் இங்கு வரும் திராவிடர்கள், அந்தந்த நாட்டு ஆட்சிகளால், எவ்வளவு கட்டுப்பாடுகளுக்கு ஆளாக்கப்படுகிறார்களோ, அவற்றைப்போன்ற கட்டுப்பாடுகளுக்குத் திராவிடத்தைவிட்டு வெளியேறும் வடவர்களும் ஆளாகவேண்டி நேரிடும்.

தமக்கும், தம் வருங்காலத் தலைமுறையினர்க்கும் திராவிடத்தையே வாழுமிடமாகவும்—குடியுரிமைக்குரிய இடமாகவும் ஆக்கிக் கொள்ள கருதி, வேறு எந்த நாட்டையும் தாய்நாடாகவோ அல்லது குடியுரிமைக்குரிய நாடாகவோ கொள்ளாமல், திராவிடத்தின் நலத்திலே அக்கறைகொண்டு வாழுவதாக உறுதிமொழி அளிக்கும் வடவர்கள் திராவிடத்தின் குடிமக்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் நாளடைவில் திராவிடத்திற்குரியவர்களாக—திராவிடர்களாக ஆகிவிடத் துணிகிறார்கள் என்று ஆகும்.

திராவிடத்தில் வாழும் வடவர்கள், திராவிடம் பிரிந்த பிறகு, திராவிடத்தில் **(1) வேற்று நாட்டவராக இருக்க விரும்புகிறார்களா? அல்லது (2) திராவிடத்திற்குரியவர்களாகவே வாழ விரும்புகிறார்களா?** என்ற இரண்டில் ஒரு கேள்விக்கு விடையிறுத்து, அதன்படி நடக்கவேண்டியவர்களாக இருப்பார்கள்.

பாக்கித்தான் பிரிவினையின்போது பாக்கித்தானிலிருந்து இந்துக்களும், இந்தியாவிலிருந்து முசிலிம்களும் விரட்டியடிக்கப்பட்டது போன்ற நிகழ்ச்சி திராவிடப் பிரிவினையின் போது ஏற்படாது; வடவர்களை விரட்டியடிக்கவேண்டும் என்ற சூழ்நிலையைத் தி. மு. கழகம் ஒருபொழுதும் ஏற்படுத்தவில்லை, இனி ஏற்படுத்தவும் விரும்பாது. வடவர் ஆதிக்கம் அடியோடு ஒழியவேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்கத்தான் கழகம் பெரிதும் பாடுபட்டு வருகிறது. திராவிடப் பிரிவினைக்குப் பிறகு வடவர்கள் இங்கேயே தங்கிவிடுவதும், தாங்களாகவே வெளியேறிவிடுவதும் ஆன நடவடிக்கைகள் அமைதியான சூழ்நிலையில் நடைபெறுவதைத்தான் தி. மு. கழகம் விரும்புகிறது.

பாக்கித்தான் பிரிவினைக்கு முன்னால் ஒருவரையொருவர் விரட்டியடிக்கும் மாற்சரிய நிலை இந்துக்களுக்கும் — முசிலிம்களுக்கும் இடையே நிலவியதால், பிரிவினையின்போது ஒருவரையொருவர் விரட்டியடித்தல் மும்முரமாக நடைபெற்றது. அதுபோன்று விரட்டியடிக்கும் மனப்போக்கும் மாற்சரியமும் இப்பொழுது இல்லாததால், திராவிடப் பிரிவினையின்போதும் இருக்க இடமில்லை. தி. மு. கழகம் திராவிடநாட்டவரின் தெளிவுணர்வைத் தூண்டுகிறதேயொழிய வெறியுணர்வைத் தூண்டவில்லை. விரட்டியடிக்கும் சூழ்நிலையை வடவர்களாகத் தேடிக்கொண்டால் உண்டே ஒழிய, தி. மு. கழகத்தவர்களோ அல்லது திராவிடர்களோ தாமே முனைந்து நின்று செய்ய முற்படமாட்டார்கள் என்பதை வடவர்கள் இப்பொழுதே தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

எனவே, திராவிடம் பிரிந்த பிறகு, திராவிடத்தில் வாழுவதா அல்லது தாமே வெளியேறுவதா என்பதைத், தாங்களாகவே தீர்மானித்துக்கொள்ள வேண்டிய நிலையில்தான் இங்கு வாழும் வடவர்கள் விடப்படுவார்கள்.

❖ ❖ ❖

வினா : இந்தி எதிர்ப்பு இயக்கம் முதன்முதல் எப்பொழுது தோற்றம் எடுத்தது ?

விளக்கம் : காங்கிரசின் வேண்டப்படாத கொள்கைகளையும் கோட்பாடுகளையும் நேர் எதிரிடையாக இருந்து எதிர்த்துவந்த நீதிக் கட்சியினர், காங்கிரசின் தேசிய மொழிக் கொள்கையையும் எதிர்த்தனர். பொதுவாக நீதிக்கட்சியினர் என்று சொல்லுவதைவிட, நீதிக்கட்சியைச் சார்ந்திருந்த சுயமரியாதை இயக்கத்தினர்தான் இந்தி எதிர்ப்புக் கருத்துக்களை முதலில் வெளியிட்டனர் என்னலாம். சுயமரியாதை இயக்கத்தினர் மட்டுமல்லாமல் நல்ல தமிழார்வங்கொண்ட தமிழர்களும் இந்தி இந்தி எதிர்ப்புக் கருத்துக்களை அவ்வப்போது சிற்சில இடங்களில் வெளியிட்டு வந்தனர்.

1937-ஆம் ஆண்டில், சென்னை முதலமைச்சராக இருந்த அன்பர் ஆச்சாரியார் இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கக் கட்டளை பிறப்பித்தபோது, அந்தக் கட்டளையை எதிர்த்து, முதன் முதல் ஆச்சாரியாருக்குத் தந்தியடித்தவர், இப்பொழுது ஈழத்தடிகள் என்ற பெயரிலிருக்கும் ஈழத்துச் சிவானந்த அடிகளாவார். அவர் அப்பொழுது கரூர் அறிவுதயக் கழகத்தின் ஆசிரியராக இருந்து தமிழ்த் தொண்டாற்றி வந்தார். தோழர் ஈழத்தடிகள் அவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பியதற்குப் பிறகு நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எதிர்ப்புக் குரல் எழுப்பினார். பிறகு பெரியார் இராமசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட தன்மதிப்பு இயக்கம் தன் முழு எதிர்ப்பைக் காட்டத் துவங்கிற்று.

இந்தி எதிர்ப்பை ஒரு இயக்கமாக உருவாக்கி, அதனைச் செயற்படுத்த முதன் முதல் அரும்பாடுபட்டவர் தோழர் ஈழத்தடிகளே ஆவார். நாளடைவில் பெரியார் இராமசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட தன்மதிப்பு இயக்கம் தன் முழு ஆதரவை அந்த இயக்கத்துக்குக் கொடுக்கத் துவங்கியவுடன், எதிர்ப்பு கொழுந்துவிட்டு எரியத்தொடங்கிற்று.

இந்தி எதிர்ப்பு இயக்கம் முதன் முதலில் 1937-ஆம் ஆண்டில் தோழர் ஈழத்தடிகள் முயற்சியால் தோற்றங்கொண்டது என்று கூறலாம்.

❖ ❖ ❖

வினா : திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கதராடையை உடுத்தலாமா ?

விளக்கம் : தி. மு. கழகத்தினர் கதராடையை உடுத்துவதில் தவறில்லை; கதராடையையே உடுத்தவேண்டும் என்ற கட்டாயமில்லை.

473

காங்கிரசுக் காரர்கள் கதரைக் 'கொள்கை' யின் அடிப்படையில் உடுத்துவதால், அவர் கள் எல்லோரும் கதரைக் கட்டாயம் உடுத் தித் தீரவேண்டிய இன்றியமையாத நிலையி லிருப்பவர்கள் ஆவார்கள். அத்தகைய கதர்க் கொள்கையைத் தி. மு. கழகம் ஏற்றுக்கொள் ளவில்லையாதலால், கழகத்தினர் அதனைக் கட்டித் தீரவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட வில்லை.

கைத்தறியை நம்பி வாழும் இலட்சக்கணக் கான மக்கள் மிகவும் சீர்குலைந்த நிலையிலிருப்ப தாலும், அவர்கள், நிலையைச் சற்று உயர்த்த கைத்தறித் தொழிலைத் தக்கப் பாதுகாப் புடன் காப்பாற்றித் தரவேண்டியிருப்பதா லும், அவர்கள் அந்தத் தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலையும் ஏற்று நடத்த இயலாதவர்களாக இருப்பதாலும், அவர் களின் ஆயுட்காலம் வரையிலுமாவது கைத் தறித் தொழிலைக் காப்பாற்றிக்கொடுக்கவேண் டியது அவசியம் ஆகும் என்று கருதி, தி. மு. கழகத்தவர்கள் எல்லோரும் கைத்தறி ஆடை களை உடுத்தவேண்டும், கைத்தறிக்கு ஆதரவு தரவேண்டும் என்னும் கருத்துப்பட கழகம் தீர்மானம் செய்திருக்கிறது. கழகம் கைத் தறியை ஆதரிப்பதற்குக் காரணம், 'பொறித் தொழில் கூடாது கைத்தொழிலே தேவை' என்ற கொள்கை அல்ல, கைத்தறியாளர்க்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையே ஆகும்.

கதர், கைத்தறித்துணி ஆகையால் அத னைத் தி. மு. கழகத்தினர் உடுத்திக்கொள்வது தவறாகாது; உடுத்திக்கொள்ளவேண்டும் என்ற கட்டாயமில்லை; எந்தக் கைத்தறித் துணியாக இருந்தாலும் உடுத்திக்கொள்ள லாம்.

❖ ❖ ❖

வினா : அதிருட்டம் என்பது ஒன்று உண்டா?

விளக்கம் : அறியாதவைகளைப்பற்றி மனிதன் கற்பித்துக்கொண்ட பலவற்றிலே 'அதிருட்டம்' என்பதும் ஒன்றாகும்.

அதிருட்டம் என்பது, 'துர்அதிருட்டம்' என்பதும் மனிதனின் கற்பனை உலகில் உலாவுகின்றனவே யல்லாமல், உண்மையில் அப்படி இரண்டு வெளிப்படையாக உலாவிக் கொண்டிருக்கவில்லை.

'அதிருட்டம்'—'துர்அதிருட்டம்' ஆகிய இரண்டும் அண்டத்தில் ஏற்படும் விளைவு களுக்கு, அவை பயக்கும் தன்மைகளை நோக்கி இடப்படும் பெயர்களே ஒழிய, விளைவுகளுக்கு முன்பே கண்டுகொள்ளக்கூடிய உண்மைகள் அல்ல.

தொடர்புடையோர்க்கு விளைவுகள் நல்லன வாகப் படுமேயானால், அந்த விளைவுகள் 'அதி ருட்டத்தின் பயன்' என்று கூறுவர்; விளைவு கள் நல்லவல்லனவாகப்படுமேயானால், அந்த விளைவுகள் 'துர்அதிருட்டத்தின் பயன்' என்று கூறிடுவர்.

அண்டத்தில் காணப்படும் ஒவ்வொரு காரி யத்திற்கும் காரணம் இருக்கவே செய்கிறது. சில விளைவுகளுக்கான காரணங்களை மனிதன் தன் அறிவினால் கண்டுபிடித்துவிடுகிறான். அப்படிப்பட்ட விளைவு ஒன்றைப் பொறுத்து, ஏன் அந்த விளைவு ஏற்பட்டது என்று கேட் டால், அதற்கான காரணத்தைக் கூறிவிடு கிறான். அப்படிப்பட்ட நேரத்தில் அதிருட் டம்—துர்அதிருட்டம் போன்ற காரணங்களை அவன் முன் கொண்டுவந்து வைப்பதில்லை. எடுத்துக்காட்டாக ஒரு எலுமிச்சை அளவு இரும்புக் குண்டையும், அதே அளவு பஞ்சு உருண்டையையும் கையில் எடுத்துக்கொண்டு இரண்டையும் தண்ணீர் நிறைந்த தொட்டி யில் போட்டால், இரும்புக்குண்டு தண்ணீ ருக்கு அடியில் போய்ச் சேருகிறது; பஞ்சு ருண்டை தண்ணீரின் மேல் மிதக்கிறது. ஏன் இரும்புக்குண்டு தண்ணீருக்கு அடியில் போக வேண்டும், பஞ்சுருண்டை தண்ணீரின் மேலேயே மிதக்கவேண்டும் என்று கேட்டால், இரும்புக் குண்டிற்கு 'அதிருட்டம்' இருந்தது, எனவே தண்ணீருக்கு அடியில் போயிற்று, பஞ்சுருண்டைக்கு அந்த 'அதிருட்டம் இல்லை' எனவே தண்ணீருக்கு மேலேயே மிதந்தது என்று யாரும் சொல்ல முன்வரமாட்டார்கள். இரும்புக் குண்டு பளுவானது, எனவே தண் ணீருக்கு அடியில் போயிற்று, பஞ்சுருண்டை இலேசானது எனவே தண்ணீருக்கு மேல் மிதந்தது என்றுதான் எவரும் விடை கூறுவர்.

அந்த இரும்புக்குண்டிலிருந்து ஒரு கடவுட் சிலை செய்யப்படுவதாகவும், அந்தப் பஞ்சு அந்தக் கடவுட் சிலையைத் துடைப்பதற்காகப் பயன்படுவதாகவும் வைத்துக்கொள்வோம். இப்பொழுது, ஏன் அந்த இரும்புக்குண்டு கடவுட் சிலையாயிற்று? ஏன் அந்தப் பஞ்சு அதனைத் துடைப்பதற்கான பொருளாயிற்று? இரும்புக்குண்டு கடவுளின் பீடமாகவும், பஞ்சு

கடவுட் பதுமையாகவும் ஏன் ஆகியிருக்கக் கூடாது? என்று கேட்டால், காரணங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியாத நிலையில், இரும்புக் குண்டிற்கு 'அதிருட்டம்' இருந்தது எனவே அது கடவுட் சிலையாயிற்று என்றும், பஞ்சுக்கு அந்த 'அதிருட்டம் இல்லை', எனவே அது துடைக்கும் பொருளாயிற்று என்றும் கூறுகின்றனர்.

ஒரே மலையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட இரண்டு கற்றுண்டுகளில் ஒன்று கடவுட்சிலையாக மாறுகிறது, மற்றொன்று படிக்கட்டாக மாறுகிறது; ஏன் என்றுகேட்டால் ஒன்றிற்கு 'அதிருட்டம்' இருந்தது, மற்றொன்றிற்கு 'அதிருட்டம் இல்லை' என்று கூறிவிடுகின்றனர்.

அதுபோலவே ஒரு தாய் வயிற்றில் பிறக்கும் இரட்டை ஆண் குழந்தைகளில் ஒன்று பிற்காலத்தில் அரசனாகிறது, மற்றொன்று ஆண்டியாகிறது; ஏன் என்று கேட்டால் ஒன்றிற்கு 'அதிருட்டம்', மற்றொன்றிற்குத் 'துர்அதிருட்டம்' காரணம் என்று கூறிவிடுகின்றனர்.

இரண்டு பேர்கள் குதிரைப்பந்தயத்திற்குப் போகிறார்கள் ஒருவன் ஆயிரரூபாய் பெற்றுத் திரும்புகிறான், மற்றொருவன் ஆயிர ரூபாய் இழந்துவிட்டுத் திரும்புகிறான்; ஏன் என்று கேட்டால் ஒருவனுக்கு 'அதிருட்டம்' இருந்தது, என்று சொல்லி விடுகின்றனர்.

ஒரே வகுப்பைச் சேர்ந்த இரண்டு மாணவர்களிடம் ஒரு கூட்டல் கணக்கைப் போட்டுக் கொடுத்து கூட்டிச் சொல்லச்சொன்னால், ஒருவன் சரியாகக் கூட்டிப் போட்டுவிடுகிறான், மற்றொருவன் தவறாகக் கூட்டிப்போடுகிறான்; ஏன் என்று கேட்டால் ஒருவனுக்கு அறிவு இருந்தது, மற்றொருவனுக்கு அறிவில்லை என்ற காரணத்தைக் காட்டுகிறார்களே ஒழிய, ஒருவனுக்கு 'அதிருட்டம்' இருந்தது மற்றொருவனுக்கு 'அதிருட்டம் இல்லை' என்ற காரணத்தைக் காட்டுவதில்லை.

இவற்றையெல்லாம் கவனிக்கும்போது காரணம் அவ்வளவு எளிதாகக் கண்டுபிடிக்க முடியாத விளைவுகளையெல்லாம், அவற்றின் நன்மை தீமை நோக்கி முறையே 'அதிருட்டம்' என்றும் 'துர்அதிருட்டம்' என்றும் கற்பனைக் காரணம் கற்பித்து மக்கள் அழைக்கிறார்கள் என்பதைத் தவிர, அதிருட்டம்—துர்அதிருட்டம் என்பவற்றில் வேறு பொருள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. தோல்வியுற்றவன் மன அமைதி பெறுவதற்கு வேண்டுமானால், இந்த அதிருட்டம்—துர்அதிருட்டம் என்ற கற்பனைச் சொற்கள் பயன்படலாமே யல்லாமல், இவற்றில் உண்மை ஏதும் பொதிந்துகிடக்கவில்லை.

'அதிருட்டம்—துர்அதிருட்டம்' என்பவைகள், வெற்றி—தோல்வி விளைவுகளை நோக்கி இடப்படும் பெயர்களாக இருக்கின்றனவே ஒழிய, முன் கூட்டியே சுட்டிக்காட்டப்படும் பொருள்களாக இல்லை.

ஒரே நிகழ்ச்சியை ஒருவன் தன் 'அதிருட்டத்தின் விளைவு' என்கிறான், மற்றொருவன் தன் 'துர்அதிருட்டத்தின் விளைவு' என்கிறான். அவனுக்குக் காணப்படும் விளைவின் தன்மையைப் பொறுத்து விளைவுக்குப் பெயரிடுகிறான் என்பதுதான் தெரியவருகின்றது.

எனவே அதிருட்டம்—துர்அதிருட்டம் என்பவைகள் புலப்படாத காரணங்களுக்கு இடப்படும் கற்பனைப்பெயர்கள் என்க!

❖ ❖ ❖

வினா: கடமை பெரிதா? உரிமைபெரிதா?

விளக்கம்: கடமை—உரிமை ஆகிய இரண்டில் எது பெரிது என்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அளவுக்கு இரண்டும் ஒரே நிலையின அல்ல, தன்மையின அல்ல; ஒன்றிற்கு ஒன்று மாற்றாகக் கொள்ளக்கூடியனவுமல்ல. எனவே எது பெரிது என்று பார்ப்பது பொருத்தமாக இருக்காது.

'கடமை என்பது மனிதன் செய்ய வேண்டியதை உணர்த்தி நிற்கும் சொல்லாகும்; 'உரிமை' என்பது மனிதன் பெறவேண்டியதை உணர்த்தி நிற்கும் சொல்லாகும். கடமையைப் புறக்கணித்துவிட்டு உரிமையை மட்டும் கோருவதும் பலன் தராது; உரிமையை மறந்துவிட்டுக் கடமையை மட்டும் செய்வதும் பலன் தராது. ஆகவே கடமை—உரிமை ஆகிய இரண்டும் பொருத்தமான அளவுக்கு மனித வாழ்க்கைக்குத் தேவைப்படுபவைகளேயாகும்.

'மன்றம்' சந்தா விபரம்

		உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	..	6—0—0	7—8—
ஆறு திங்கள்	..	3—0—0	
தனி இதழ்	,,	0—4—0	0—5—

தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

ஒப்பன் காலர் ஷர்ட்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

[முன் இதழ் விளக்கப்படத்தைப் பார்க்கவும்]

15-ல் இருந்து 0 வரை 12 அங்.
(1/3 மார்பு அளவு முன்பக்கம் திறப்பு ஒப்பன்)

முன்பக்கத்தைக் கோட்டின்மீது வெட்டவும். முன்பக்கத்தை ஆதாரமாகக் கொண்டே பின்பக்கம் வெட்டவேண்டும்.

படம்—2. (முன்பக்கம் பின்பக்கம்)

16-ல் இருந்து 0 வரை $1\frac{1}{4}$ அங்.
17-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$ அங்.
(8-க்குமேல் $\frac{1}{4}$ அங்.)
18-ல் இருந்து A வரை $\frac{3}{4}$,,

16, 17, 18, 9 எண்கள் வரை படத்தில் உள்ளபடி வரையவும்.

படம்—3. (கை)

1-ல் இருந்து 0 வரை 11 அங்.
(கை நீளம் + $\frac{1}{2}$ அங்.)
2-ல் இருந்து 1 வரை $2\frac{1}{2}$ அங்.
(முன்னங்கை பட்டி மடிப்பு)
3-ல் இருந்து 2 வரை 9 அங்.
($\frac{1}{4}$ மார்பு அளவு)
4-ல் இருந்து 3 வரை $2\frac{1}{2}$ அங்.
5-ல் இருந்து 0 வரை $4\frac{1}{2}$ அங்.
(1/8 மார்பளவு)
6-ல் இருந்து 5 வரை 9 அங்.
($\frac{1}{4}$ மார்பளவு. 6, 0 வரை சாய்வுக்கோடு வரையவும்.)
7-ல் இருந்து 6 வரை 5 அங்.
(0, 6-க்கும் உள்ள அளவில் பாதி)
8-ல் இருந்து 7 வரை 1 அங்.

6, 7, 0 வரை உள்ள புள்ளிகள்மீது அதாவது $\frac{3}{4}$ அங். கலார்தட்டு வெட்டி எடுக்கவும்.

படம்—4 (தோள்பட்டி)

1-ல் இருந்து 2 வரை $8\frac{3}{4}$ அங்.
(பாதித்தோள் அளவு + $\frac{1}{4}$ அங்.)
2-ல் இருந்து 3 வரை $2\frac{1}{2}$ அங்.
3-ல் இருந்து 4 வரை $8\frac{3}{4}$ அங்.
4-ல் இருந்து 1 வரை $2\frac{1}{2}$ அங்.
5-ல் இருந்து 4 வரை 3 அங்.
(1/6 கழுத்து அளவு + $\frac{1}{2}$ அங்.)
6-ல் இருந்து 5 வரை $1\frac{3}{4}$ அங்.
(6, 7-க்கும் இணைப்பு)
7-ல் இருந்து 3 வரை $\frac{1}{4}$ அங்.
8-ல் இருந்து 7 வரை $\frac{1}{4}$,,

1, 2, 7, 6, 4, 1 எண்கள் வரை தோள்பட்டி படத்தில் உள்ளபடி இணைக்கவும்.

படம்—5. (காலர்)

1-ல் இருந்து 2 வரை $3\frac{1}{2}$ அங்.
2-ல் இருந்து 3 வரை 9 ,,
3-ல் இருந்து 4 வரை 4 ,,
4-ல் இருந்து 1 வரை $7\frac{1}{2}$,,
($\frac{1}{2}$ கழுத்துச் சுற்றளவு.)
5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$ அங்.
6-ல் இருந்து 1 வரை $3\frac{1}{2}$,,
7-ல் இருந்து 1 வரை $1\frac{1}{2}$,,

1, 6, 5, 3, 2, 7, 1 எண்கள் வரை காலர் இணைப்பு. 7, எண் உள்ள இடத்தில் காலர் மடிப்பு (காலர் ஸ்டென்ட்) அமைக்கவும்.

ஒவ்வொரு எண்ணுக்கும் படத்தில் இணைத்துள்ளதைப்போன்று இணைத்த பிறகே வெட்டத்தொடங்கவும்.

தையற்கலை

ஆசிரியர் : தையற்கலை வல்லுநர் K. P. சுந்தரம் G. C. T.

ஆண்கள் உடை
(முதற்பகுதி)

300 பக்கங்கள் : விலை ரூ. 3.

ஆண்களுக்கான பல்வேறுவகையான கோட்டு, ஷர்ட்டு, பாண்டு, பைஜாமா, ஸ்லாக் ஷர்ட்டு, முதலியவற்றை மிகவும் நன்ருக வெட்டித் தைப்பதற்கான கருத்து விளக்கமும் எளிதாகப் புரியும்படியான 60-க்கு மேற்பட்ட விளக்கப்படங்களும் கொண்டது.

பெண்கள் உடை
(இரண்டாம் பதிப்பு)

160 பக்கங்கள் : விலை ரூ. 2.

பெண்களுக்கு இன்றியமையாத பலவகையான பிளவுஸ், சோளி, பாடி; பாவாடை, சட்டை, பிராக்கு முதலானவற்றை எளிதாக வெட்டித் தைப்பதற்கான முறைகளும், 50-க்கு மேற்பட்ட விளக்கப் படங்களும் கொண்டது.

அச்சில் : சிறுவர் உடை—ஆண்பெண் குழந்தைகளுக்கான பல்வேறுவகையான உடை வெட்டும் விளக்கம்.

விரைவில் வருபவை : ஆண்கள் உடை (இரண்டாம்பகுதி) — முதற்பகுதியின் தொடர்ச்சியான புதுவகை உடைவெட்டும் விளக்கம்.

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை-1.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- **வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை**

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
MANRAM ACHAKAM, 26, Nainiappan St. Mannadi, MADRAS-1